ஓவியக் கவி

# வில்லியம் ப்ளேக்

3318

ACC. NO.
00121

திருவள்ளுவர் கழகம்
பாகனேரி.

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

பதிப்புரிமை
முதற் பதிப்பு : 1944

விலை அணா 10



வில்லியம் ப்ளேக்

ஓவியக் கவி

# வில்லியம் ப்ளேக்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

அன்பு நிலயம்

இராமச்சந்திரபுரம் : : திருச்சி ஜில்லா

# LIFE OF WILLIAM BLAKE

*The Artist, Poet & Mystic*

இராஜன் எலக்ட்ரிக் பிரஸ், ஜி. டி. சென்னை

# பதிப்புரை

வில்லியம் ப்ளேக் (*William Blake*) கற்பனைக் கனவிலேயே வாழ்ந்த கலைப்பித்தன்: அவன் வாழ்வும் மூச்சும் கலைக் கனவே. அவனை அக்கால மக்கள் பித்தனென்றே மதித்தனர்; பிற்காலந்தான், ‘அவன் கலைக்கே வாழ்ந்த ஓவிய மணி’ என்று உலகம் அறிந்து போற்றியது! இன்றைய உலகம், அவனது காவியத்தையும் ஓவியத்தையும் உச்சிமேல் வைத்துக் கொண்டாடுகிறது. அவை இரண்டையும் பற்றி ஏராளமான ஆராய்ச்சிகள் ஆங்கிலத்தில் வெளிவந்துகொண் டிருக்கின்றன.

நமது தமிழிலக்கிய மறுமலர்ச்சிக்கு, இக்கலைப்பித்தன் வரலாறும் வாக்கும் புதிய எழுச்சி தரும். யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார், வில்லியம் ப்ளேக்கின் வரலாற்றையும் கவிதைகளையும் ஓவியக் கலையையும் இந்நூலில் இனிய கலைத்தமிழில் விளக்குகிறார்.

உண்மையான கலைஞன் எப்படி யிருப்பான் என்பதை இந்நூல் தெளிவாக விளக்குகிறது. மறுமலர்ச்சிச் சோலையில் இக் கலைநூற் கற்பகம் தழைத்தோங்குக!

இராமச்சந்திரபுரம்,
5—6—1944.

அன்பு நிலயத்தார்.

அசு-க-து

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை ... ... | 5 |
| க. | வாழ்வும் வரலாறும் ... ... | 7 |
| உ. | கவிக் குறிப்புகள் ... ... | 38 |
| ௩. | மணி மொழிகள் ... ... | 45 |

உ

ஓவியக் கவி

# வில்லியம் ப்ளேக்

## க. வாழ்வும் வரலாறும்

### 1. கவியுலகம்

"ஒரு கவிஞனுவது பெரிய செயல்; நூற்றுண்டுக்கு ஒரு கவியே வருகிறுன்" என்றுர் வில்லியம் கௌப்பர். ஆங்கிலக் கவிதை பதினெட்டாவது நூற்றுண்டில் வேரூன்றி, பத்தொன்பதாவது நூற்றுண்டில் தளிர்விட்டு, இருபதாம் நூற்றுண்டில் கிளைவிரிந்து உலகெங்குங் கலைமணம் வீசியது. பத்தொன்பதாம் நூற்றுண்டு, மனித வாழ்விற்கே புது மலர்ச்சி யளித்தது. பழைய கட்டுப்பாடுகளெல்லாம், புதிய சுதந்தர வேகத்தில் சிதைந்தொழிந்தன. அமெரிக்கா, ஃபிரான்ஸ், இத்தாலி, இங்கிலாந்து--எங்கும் சுதந்தர சக்தி வீரநடனம் புரிந்தது; அச்சக்தி அரசியல் உலகில் மட்டுமன்றி, கவியுலகிலும் தாண்டவமாடியது; பழைய கிரேக்க உரோமச்சாயம் மங்கிக் கலைவாழ்வில் புதிய வசந்தப் பொலிவு குலுங்கியது, அக்காலம் கவிக் கற்பகத்தில் வாடா நறுமலர்கள் பல பூத்தன. அந்த மலர்கள் வறுமையாலும், அறியாதார் வசைகளாலும் தாக்கப் பெற்றும் வாடவில்லை. அவற்றின் மணம் இன்னும் உலகெங்கும் வீசிக்கொண்டிருக்கிறது. இளங்கவி தாமஸ் சாட்டர்டன், வில்லியம் கௌப்பர், ஸர் வால்டர் ஸ்காட்,

ராபர்ட் ஸதி, தாமஸ் மூர் ஆகியவர்கள் ஒருவகைக் கவி கள்; வேர்ட்ஸ் வொர்த், பைரன், கீட்ஸ், ஷெல்லி ஆகிய நால்வரும் பெருங்கவிகள். இவர்களைக் கவிஞருட் கவிகள் (Poets among poets) என்னலாம். இவர்களால் உணர்ச்சி பெற்றுக் கவிஞர்களானவர் பலராவர்.

## 2. கலைப் பித்தன்

உலகப்புகழ் பெற்ற இக்கவிகளுக்கிடையே ஓவியக் கவி யொருவன் தோன்றினான்; அவனே வில்லியம் ப்ளேக் (William Blake). மேற்குறித்த கவிகளெல்லாரும் இவன் காலத்திலேதான் இலண்டனில் வசித்தனர். ஆனால், இவன் மட்டும் தனது தனிமனக் கனவிலேயே எழுபதாண்டுகளு் வசித்தான். இவன் புறவுலகின் இசைவசைகளைப் பாராட்டாமல், உள்முகப்பட்டிருந்தான். மற்றவர்கள் படித்து, மனத்தைப் புரட்டி, இலக்கணம் பார்த்துக் கவி பாடினர். இவன் படிக்காமல் பாடினான்; பழகாமல் படமெழுதினான்! இவனது வாக்கும் போக்கும் உள் ளிருந்தே உதித்தன. இவனை வறுமையும், பொறுமைப் பகைவர் சிறுமையும் பலமாகச் சோதித்தன. எந்தச் சோதனையும் இவனை வாதிக்கவில்லை. இவன் யாரையும், எதையும் மதியாமல் உள்ளரசின் மன்னன்போலத் தலை நிமிர்ந்து நடந்தான்; உட்காட்சிக் கனவையே பீலி யால் ஓவியமாகவும், பேனாவால் காவியமாகவும் எழுதி னான். சுற்றி யிருந்தவர் இவனைப் பித்தன் என்றனர். அறிஞரோ இவனைக் "கலைப்பித்தன், கவிச்சித்தன்" என் றறிந்தனர்!

எலிஜபெத் காலக் கலைக்கும் விக்டோரியா காலக் கலைக்கும் இணைப்பாயிருந்து, எத்தனையோ இளங்கவி களுக்கு ஆவேசமளித்த இந்த அருட்புலவன் வரலாற்றைக் கேளுங்கள் :

## 3. ஜேம்ஸ் வில்லியம்

இலண்டன் தங்கச் சதுக்கத்தில் (Golden Square), பிராட் தெரு இருபத்தெட்டாம் எண் வீட்டிற்குச் செல்வோம். வாசலில் துணிமணிக் கடை, உள்ளே குடும்பம் நடக்கின்றன. கடையில் நாடா, காலுறை, உடுப்புகள் முதலியவை காண்கின்றன. ஜேம்ஸ் வில்லியமே இக்கடைக்காரர். அவர் வியாபாரத்திற்கிடையே ஏதோ ஒரு புத்தகத்தைப் படிக்கிறார்; மணியாயிற்று; கடையை மூடி உள்ளே செல்கிறார். மனைவி காதரைன் (Catherine) முக மலர்ந்து கணவனை உபசரிக்கிறாள்; உணவுத் தட்டுகளை வரிசையாக வைத்து, "வாருங்கள் என் செல்வர்காள்!" என்றழைக்கிறாள். ஜேம்ஸ், ஜான், ரிச்சர்ட், எலிஜபெத் ஆகிய குழந்தைகள் "அம்மா" என்று அன்புடன் கூவி வந்து கலத்தின்முன் உட்காருகின்றன. "எங்கே வில்லி? ஏ...வில்லி!" என்றழைக்கிறாள் தாய்; பதிலில்லை. தாய் தோட்டத்திற்கு ஓடுகிறாள்.

அதோ, அங்கு மண்ணில், ஏதோ படங் கிறுக்குகிறானே, அவனே வில்லி! "பூக்களுடன் பேசுவது, படங் கிறுக்குவது, எதையோ நினைத்துக்கொண்டிருப்பது—இவையே வேலையா? வாடா சாப்பிட!" என்று தாய் குழந்தையைத் தூக்கிச் செல்லுகிறாள்.

சாப்பாடானதும் தந்தை ஜேம்ஸ் ப்ளேக், *ஸ்வீடன்பர்க் என்னும் ஸ்வீடிஷ் ஞானி எழுதிய ஒரு தத்துவ நூலைப் படித்துத் தனது குடும்பத்திற்கு விளக்குகிறார். அவர் சொல்வதையெல்லாம் வில்லியம் கூர்ந்து கவனிக்கிறான். பேச்சு முடியும்போது, "குழந்தைகளா, நமக்குச் சர்ச்சு (Church) வேண்டுமா?" என்று கேட்கிறார் "உள்ளே 'சர்ச்சைதான் வேண்டும்; 'சர்ச்சில்' சாமியார் இருக்கிறார். நம் உள்ளே சாமியே இருக்கிறது!" என்கிறான், நேற்றுப் பிறந்த சிறுவன்!

---

* ஸ்வீடன்பர்க்: இவ்வறிஞர் வரலாறு "ஞானி எமர்சன்" என்னும் நூலில் உள்ளது.

## 4. விநோதக் குழந்தை

இச் சிறுவனே நமது ஓவியக் கவி, வில்லியம் ப்ளேக். வில்லியம் 28-11-1757-ல் பிறந்தான்; பதினைந்தாம் நாள் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயிலுள்ள ஜேம்ஸ் முனிவர் கோயில் கிப்பன் தீர்த்தத்தில் ஞானஸ்நானம் செய்யப் பெற்றான். வில்லியம், பிறவிப் புலவன். அவன் நடை பேச்சு வார்த்தை ஆடல் பாடல் எல்லாமே புதுமையாயிருந்தன. தனிமை, இயற்கைப் பொருள்களுடன் பேசுதல், காட்சிகள் காணல்—இவை அவனுக்கு நான்கு வயதிற்கு முன்பே பழக்கமாய்விட்டன. எட்டு வயதில் அவன் கனவுகளுக்கு இறக்கை முளைத்துவிட்டது: அவன் வீட்டில் தங்குவதில்லை. இலண்டனைச்சுற்றி காம்பெர்வெல், டல்விச், ஸிடன்ஹாம், நியூயிங்டன் முதலிய கிராமங்கள் இருந்தன. அவற்றின் வயல்களிலும் தோட்டங்களிலும் வில்லியம் சுயேச்சையாகத் திரிந்தான்; வயல் வரப்புகளிலும், கடற்கரைகளிலும் தனியாக அமர்ந்து ஏதோ சிந்தித்திருந்தான்; விநோதக் காட்சிகள் கண்டான்; பசிக்கும்போதே வீட்டை எட்டிப் பார்த்தான்; அப்போது, "அம்மா, நான் தீர்க்கதரிசிகளைக் கண்டேன்; காதரைன் முனிவரைப் பார்த்தேன்" என்று வருணித்தான். "சை அசடே, உளருதே பைத்தியம்" என்றாள் தாய்! "அப்பா, நான் ஒரு மரத்தில் தேவதைகளைக் கண்டேன்!" என்றான் பையன். "சை, புளுகுணி; இப்படியெல்லாம் உளறினால் வைப்பேன் பூசை" என்றார் தகப்பனார். பையன் ஒவ்வொரு நாளும் இப்படியே காட்சிகளைச் சொன்னான்; சிக்கலான பல கேள்விகள் போட்டான். ஸ்வீடன் பர்க்கையும் பைபிளையும் பலமுறை படித்த தந்தைகூட பதிற் சொல்ல முடியாமல் திகைத்தார்! மற்றக் குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் படித்தனர்

## 5. "கூண்டுக்கிளி யல்லேன்"

வில்லியம் பள்ளிச் சிறையை வெறுத்தான். தாயே அவனுக்கு எண்ணெழுத்துக் கற்பித்தாள். தகப்பனார் கடைக் கணக்குப் பயிற்றினார். ஆறு மாதத்தில் எல்லாம் கற்றுக்கொண்டு கடையில் உட்கார்ந்தான் பையன்; அங்கும் சிந்தனையுலகிலேதான் நடமாடினான். அவன் கட்டுகளை வெறுத்தான்; விடுதலையே விரும்பினான். கடையில் உடலிருக்கும்; வயல்களில் உள்ளம் உலாவும்; மனம் கனவுகள் காணும். கை, படம் போடும்; கவியெழுதும். அவனது இளங்கவியொன்றில் காணும் உயர்ந்த கருத்துக்களைப் பாருங்கள்:

"வேனிற்காலை. பசுமரங்களிற் பறவைகள் பாடுகின்றன. வேடர் கொம்பூதினர். நான் எழுந்து இயற்கை வெளியில் சந்தோஷமாகப் பாடித் திரிகிறேன். தோழன் வானம்பாடி என்னுடனே பாடுகிறது. வனங்கள் புள்ளிசையால் கலகலவென்று சிரிக்கின்றன. நீரோடை சுழித்துச் சிரித்தோடுகிறது. மாந்தர் வேடிக்கைப் பேச்சால் காற்றே சிரிக்கிறது; அதை எதிரொலித்துப் பச்சை மலைகள் சிரிக்கின்றன. எங்கும் சிரிப்புமயம். பெண்கள் 'ஹஹஹா' என்று பாடுகின்றனர். எங்கும் இன்பக் கனவுகள்.

வேனிற்காலை இன்பமே; ஆனால், பள்ளிக்கூடம் போவதென்றால், என் சந்தோஷம் ஓடிப்போய் விடுகிறது. அதில் எனக்கு உற்சாகமில்லை. சந்தோஷப் பறவை கூட்டிலடைபடுமா? கூண்டுப் பறவைக்குத் துன்பமே மிச்சம். நான் கூண்டுக் கிளியல்லேன். *ஒரு மடையன் நடையைச் சவுக்கடி கொடுத்துப் பின்பற்றச் செய்யும் பள்ளிக்கூடத்திற்கு யாரும் என்னை அனுப்பவில்லை. கடவுளுக்கு வந்தனம்; ஆற்றிலும் காற்றிலும் கவிதை நீந்தி வருகிறது; பாடுகிறேன்; வயலுக்கு வயல் ஓடுகிறேன். தனிமைக் கனவே இனிமை......."

---

*"Thank God! I never was sent to school
To be flogged into following the style of a fool."

## 6. படம் கிறுக்கினான்!

"கனவும் காட்சியும் சோறு போடுமா?" என்று தந்தை பையனைக் கண்டித்துக் கடை வேலையில் கவனமாயிருக்கச் சொன்னார். யாராவது சாமான் வாங்க வரும் போதுதான் கவனம்; மற்ற நேரமெல்லாம் பையன் ஏதோ காட்சி கண்டான்; கண்டதைக் காகிதத்திற் கிறுக்கினான்! குறிப்பு, பேரேடு, இரசீது, துண்டுக்காகிதம் எல்லாம் இவன் படந்தான். இவன் சாமான் வாங்க வருபவரைப் போலப் படம் போட்டான்; பூக்களையும் பறவைகளையும் அழகாக வரைந்தான். தாய் பார்த்து மகிழ்ந்தாள்! தந்தை ஒருநாள் பையன் வரைந்து தள்ளும் படங்களைப் பார்த்தார்: "வில்லியம், உனக்குக் கடை வேலை சரியில்லை; போ, சித்திரக் கலாசாலைக்கு!" என்றனுப்பினார். கட்டவிழ்ந்த இளங்கன்று போல வில்லியம் காட்சி சாலைகளிலும் படக் கடைகளிலும் சுற்றினான்; ரஃபேல், மைக்கேல் ஆஞ்சிலோ, மார்டின், ஆல்பெர்ட் டூரர், ஜுலியோ ரோமானோ முதலிய ஓவிய மணிகளின் படங்களை விரும்பினான்; தன்னுள் ஒரு ரஃபேல் இருப்பதாக மதித்துக் கொண்டான்; ஏராளமான படங்களைச் சேர்த்தான்; தானும் அவற்றைப் போலவும் சொந்தமாகவும் வரைந்தான். படம் மட்டுமா? ஆசிரியரில்லாமலே ஷேக்ஸ்பியர், மில்தன், ஜான்ஸன் முதலிய புலவர் நூல்களைப் படித்தான்; அவர்களைப் போலவே கவியும் எழுத முனைந்தான்! ஆனால், முதலில் சித்திரத்திலேயே புகழ் பெற்றான், வில்லியம்.

## 7. படப் பயிற்சி

அக்காலம் ஸ்ட்ராண்டில், ஹென்ரி பார்ஸ் என்பவர் ஓவியப்பள்ளி நடத்தினர். பத்து வயதுள்ள வில்லியம் அதிற் சேர்ந்து நான்காண்டுகள் பயின்றன் (1767-1771). தகப்பனும் உயர்ந்த கிரேக்க உரோமப் புலவர் படங்கள் மாதிரி அவனை வீட்டில் எழுதிப் பழகச் சொன்னர். அவன் பல படங்களைப் பார்த்தான், சேர்த்தான். ஆனல் எதையும் குருட்டுத்தனமாகப் பின்பற்றவில்லை. தன் கனவுகளையே அவன் வரைந்தான், எழுதினன்; எவர் அபிப்பிராயத்தையும் அவன் கேட்கவில்லை.

"சுயேச்சையா யிரு; எவர் அபிப்பிராயத்தையும் கேட்காதே! எண்ணெயும் தண்ணீரும் சேர்த்து விளக்கெரித்தால் எப்படி யிருக்கும்? உலகில் அறியாமையே அதிகம். அறியாதார் நேர்த்தியான வேலையையும் பழிப்பார்கள். இரண்டு பேர் ஒன்ருயிருப்பதில்லை. குருட்டுத்தனமாக எவர் வழியிலும் செல்லாதே! அதைவிடக் கழுதையாய், புழுவாய், நாற்காலியாய், முக்காலியாய், ஜடமாய் இருப்பது நலம். சிலர் பொய்த்துதி செய்வர்; சிலர் கண்ணடி பார்த்த குரங்குபோலத் தம் அவலட்சணத்தையே வியப்பார். உன் ஊகத்தையே பின்பற்று!"

இவை ப்ளேக்கின் கலைக் குறிப்புகள். ப்ளேக்கின் கலை, ப்ளேக்கியக் கலையே!

படப் பயிற்சியுடன் வில்லியம், படச்சிற்பமும் (Engraving) கற்றுன். முதலில் அரண்மனைச் சிற்பி ரைலாண்டிடம் தந்தை அழைத்துச் சென்ருர். "அப்பா, இவன் முகம் பிடிக்கவில்லை; தூக்குமேடை ஏறுகிறவன் முகம் போலிருக்கிறது" என்ருன் பையன். (ரைலாண்டும் அப்படியே கிழக்கிந்திய கம்பெனி வழக்கொன்றில் அகப்பட்டுத் தூக்கிலேறினன்!). மகாராணித் தெருவில் ஜேம்ஸ் பஸீர் என்னும் சிற்பி பள்ளிக்கூடம் வைத்திருந்தான். வில்லியம் அதிற் சேர்ந்து தொழில் கற்ருன். பஸீர்

உரோமில் பயின்ற புலவன்; சாசன இலாகா ஊழியன்; நல்ல கனவான்; மாணவரிடம் அன்புள்ளவன்; வயது ஐம்பத்தொன்று. அவன் தனது முதிர்ந்த அனுபவத் திறமையைக் கொண்டு வில்லியத்திற்குக் கருத்துடன் படச்சிற்பம் பழக்கினான். ஏழாண்டுகள் (1771-1778) இந்த நிபுணனிடம் வில்லியம் பயின்று நிபுணனானான். வில்லியம், ஆசிரியர் படங்களையும் பழம்புலவர் படங்களையுங் கண்டு தனக்கென ஒரு கலை யமைத்துக்கொண்டான்; பள்ளிக்கூடத்திற்கு வரும் பெரிய மனிதர்களை யெல்லாம் கவனித்து, அவர்கள் புலமையைத் தனதாக்கிக் கொண்டான்; ஆலிவர் கோல்ட்ஸ்மித், ஞானி ஸ்வீடன்பர்க் போன்ற பெரியோரை அவன் பார்த்தான்.

## 8. அஞ்சா நெஞ்சன்

வில்லியம் ப்ளேக், கட்டைகுட்டையாகத் திண்ணென இருந்தான். அவன் அகராதியில் அச்சம் என்பதே யில்லை. அவன் வயிர நெஞ்சன், நிமிர் நடையன், கூர் கண்ணன், அகல நெற்றியன்; மதிப்பொலிவு மிக்க மேதாவி. அவன் பிறரைக் கெஞ்சான்; மிஞ்சுவான்; எவரையும் வணங்கான்; எதற்கும் கலங்கான். அவனுக்கு உள்ளமே கோயில்; எம்மதமும் சம்மதம்; உள்ளூறும் எண்ணமே கொள்கை; உள்ளே மலரும் வார்த்தையே பேச்சு; தனிமோனமே விருப்பம். பழைய வழிகளையும் பகட்டுகளையும் அவன் வெறுத்தான்; புதிய உணர்ச்சியை வளர்த்தான். அவன் சோம்பலை வெறுத்தான்; எப்போதும் சுறுசுறுப்பாக உழைத்தான்; "உடல் நலமோ, நோயோ, நான் உழைப்பேன், உழைக்கிறேன்" என்றான் ப்ளேக். இப்படி யிருப்பவனைக் கண்டால், பலருக்குப் பொறாமை கிளம்புவதுண்டு. பஸீரின் மாணவர் பலர் அவனிடம்

வெறுப்புக்கொண்டு தொல்லை செய்தனர். அவர்கள் வரையும் படத்திலுள்ள குறைகளை இவன் வெளிப்படையாகச் சொன்னான். ஆசிரியர் படத்திற்கூடக் குற்றங் கண்டான். வகுப்பில் பேச்சுத் தடித்தது. வில்லியம் வாய்ப்போர் கைப்போர் எதற்கும் சளைக்கமாட்டான். இவனால் சிற்பச்சாலையின் அமைதி கெடுவதைப் பார்த்து பஸீர் ஒரு யுக்தி செய்தான்.

## 9. வெஸ்டு மின்ஸ்டர் அபே

### (*WESTMINSTER ABBEY*)

வெஸ்டு மின்ஸ்டர் அபே, உலகின் சிற்பச் செல் வங்களுள் ஒன்று. அதுவே ஆங்கிலேய வரலாறு, ஆங் கில நாகரிக விளக்கம். புகழ்பெற்ற புலவரும், கவிஞ ரும், வீரரும், அரசரும், குருக்களும் அதில் அடக்கம் செய் யப்பெற்றுள்ளனர். அது கோதிக் சிற்பத்தின் (Gothic Art) ஜோதி. அதன் கூர்ந்த வளைவுகளையும், ஊசிக்கோபுரங் களையும், வேயுட்களையும், பூவேலைகளையும், தூண்களையும், சிலைகளையும் காணக்காணக் கண் குளிரும்; அதன் செதுக்கு வேலைகள் சித்திர விருந்தாகும்; அது கட்டிடக் கவிதை!

இக் கட்டிடத்தில் பல சிற்பச் செல்வங்களை பஸீர் படமெழுதவேண்டி யிருந்தது; “தம்பி வில்லியம், நீ சுயேச்சையாக வெஸ்ட் மின்ஸ்டர் அபேயில் உள்ள அழகான சிற்ப விநோதங்களை எழுதி எழுதிப் பழகு!” என்றனுப்பி னான்.

வில்லியம் வெஸ்ட்மின்ஸ்டர் கோயிலுள் பரவசமாகச் சென்றான். அதன் கலையெழில் அவனை ஆவேசப் படுத்தியது. அதன் அழகையெல்லாம் அள்ளிக்கட்ட முனைந்தான், நமது கலாயோகி. பஸீர் அவனுக்கு எல்

லாச் சலுகையுந் தந்தான். கோயில் சேவகரும் பதினறு வயதுள்ள இந்த மேதாவிக்கு அமைதியான இடந்தந்தனர். வில்லியம் எவர் தொல்லையுமில்லாமல், எல்லையற்ற மோனத்தனிமையில் ஊன்றிப் படமெழுதினன்; சிலைகள் முன் சிலைபோலமர்ந்தான்; செதுக்கிய கல்லில் சீவனைக் கண்டான். பசிதாகங்கூடத் தெரியாமல், காலம் செல் வதை யறியாமல், அவன் சித்திரமெழுதினன்; தனிமை யில் பல அரிய காட்சிகளைக் கண்டான்; தேவர் முனிவர் சிலைகளெல்லாம் தன்னுடன் பேசுவதுபோல் உணர்ந்தான். ஓவியத்துடன் ஏராளமான கவிதைகளும் அவனுள் இயல் பாக மலர்ந்து கொட்டின. வில்லியம் ப்ளேக்கை ஆக்கி யது, வெஸ்ட் மின்ஸ்டர் அபேதான் என்னலாம்.

1778-ல், அவன் இராயல் அகெடமியிற் சேர்ந்து, மோஸேர் என்னும் ஓவியரிடம் வர்ணச் சித்திரம் பயின் ருன். அவன் சிறந்த இத்தாலியப் புலவர் ஓவியங்கள் போல் எழுதிவந்தான். ஆசிரியர், "பழைய சரக்குகள் எதற்கு? புதிய சித்திரங்களைப் பழகு!" என்ருர். "காட் டும் உமது புதுச்சரக்கை!" என்ருன் வில்லியம். காட்டி ஞர் ஆசிரியர். "இஃதென்ன, கற்றுக்குட்டி வேலை!" என்ருன் மாணவன். இருவருக்கும் பிடிக்கவில்லை. ப்ளேக் மறுபடியும் வெஸ்ட் மின்ஸ்டர் அபேயின் தனிமையில் ஊன்றியே கலையை வளர்த்தான்.

## 10. மதியூகக் கலை

ப்ளேக், தானே தனது கலையைப் படைத்துக்கொண்டான்; பிறரைப் பார்த்தெழுதுவதைச் செத்த கலையென ஒதுக் கினன்; இயற்கையைப் பார்த்தெழுதுவது கூட மட்டம் என்ருன். கலையைப்பற்றி ப்ளேக் வருணிப்பதாவது:

"ஓவியமும் காவியமும் உள்ளெழுச்சியின் புறவடிவமே; நான் உள்ளுலகில் வசிக்கிறேன். சாதாரணக் கவி, கதிரவனை

ஒரு தங்க நாணயமாகக் காண்பான். கருமிக்குக் கதிரோனைவிடத் தங்க நாணயமே பெரிதாயிருக்கும். நான் சூரியனில் தேவதைகளைக் காண்கிறேன்; வனங்களில் தெய்வக் காட்சிகளைக் காண்கிறேன்; கண்ணாகிய சாளரத்தின் வழியாக அந்தர்யாமியாகிய நானே பார்க்கிறேன். அதன் ஊகமே, உலகும் இயற்கையும்; அதன் விளக்கமே கவியும் கலையுமாம். என் கண்ணுக்கு இரண்டு பார்வை யுண்டு: ஒன்று உருவை, மற்றொன்று உயிரைக் காணும். நான் மரத்தைக் காண்கிறேன்! மரத்துள் மனிதனைக் காண்கிறேன்; கதிரைக் காண்கிறேன்; கதிரிற் கடவுட் சோதியைக் காண்கிறேன்! நான் கண்ணை உள்ளே திருப்பிக் காண்கிறேன்; அல்லும் பகலும் கடவுட் கலப்புடன் இருக்கிறேன். தேவ தூதர்கள் என்னை நடத்துகிறார்கள். நான் தோலைப் பார்ப்பதில்லை; சுளையின் சுவையைப் பார்க்கிறேன். ஒரு புழு அல்லியிற் சுற்றிய குழந்தைபோலக் காண்கிறது. அதன் பசும் உடல் அல்லியிலை; ஜீவன் குழந்தை. வானம் பறவைகளைப் பறக்கும் இன்ப வுலகங்களாகக் காண்கிறேன். பொறிக்காட்சி புல்லியது. அகக்காட்சி எல்லையற்றது. சித்திரம் சித்த விகாசமே. கவிதை உட்கனவின் சொல்லோவியமே. உட்காட்சியில்லாமல் வெளியுருவைத் தீட்டி மார்தட்டும் கலையாளிகள், கொலையாளிகளே! அவர்கள் கலையின் உயிரை வாங்கி விடுகிறார்கள். உட்காட்சியின் உருவிளக்கமே கலை."

**உள்ளழகின் மதியூகப் பொலிவுதான் பிளேக்கின் அருட்கலை மாண்பாகும். அதை யறிந்தாலே அவனையும் அறியலாம்.**

## 11. தொழில் நடத்தினான்

இருபது வயதுக் காளையான ப்ளேக், தனது தொழி வில் நல்ல தேர்ச்சி பெற்றான்; இதற்குள் பல கவிகளும் எழுதினான்; எழுதிக்கொண்டே பாட்டும் இழுத்தான். எல்லாம் சித்தம் போக்குத்தான்! ப்ளேக் பணத்திற்கு அடிமையல்லன்; பணக்காரன் வாலைப் பிடிக் கும் ஏழையுமல்லன். உழைத்துப் பிழைத்துக்கொண்டு, உள்ளுறவில் வாழும் கலாயோகியே அவன். அவன் பட மும் பாட்டும் சிலரைக் கவர்ந்தன. ஸ்டதார்ட், (Stothard) ஃப்ளாக்ஸ்மன் (Flaxman), ஹென்ரி ஃபூஸ்லி (Henry Fusely) முதலிய அருங்கலை வாணர், அவனுக்கு உண்மை நண்பரா யிருந்தனர். எல்லாரும் சேர்ந்து கலைக்கே வாழ்ந்தனர். ஹாரிஸன், ஜான்ஸன் முதலிய கம்பெனிகளுக்கும், "நாவ லிஸ்ட் (Novelist) என்ற பத்திரிகைக்கும் ப்ளேக் படங்களும் படக்கட்டைகளும் (Blocks) தயாரித்துத் தந்து பிழைத் தான். ஃப்ளாக்ஸ்மன் ஹோமரிடம் மோகங் கொண்ட வன். அவனே ப்ளேக்கிற்கு இலியாது (Iliad) காவியச் சுவையை விளக்கினான். அவன் மூலமே நம் கலைவாணனுக்கு மாத்யூ சீமாட்டியின் நட்புக் கிடைத்தது. இச்சீமாட்டி கோதிக் கலையில் பிரியமுள்ளவள். ப்ளேக்கின் கவியும் பட மும் அவளைப் பரவசப்படுத்தின. அவள் தன் கணவனி டம் பாதிச்செலவு பெற்று, ஃப்ளாக்ஸ்மன் தந்த பணத்தை கொண்டு ப்ளேக்கின் கவிக் குறிப்புகளை (Poetical Sket- ches) 1783-ஆம் ஆண்டு வெளியிட்டுதவினாள். அதைப் படித்த நண்பர், "நன்றாயிருக்கிறதே!" என்றனர்; பகை வர், "சைசை, இதென்ன ஆபாசம்!" என்றனர். இரண்டை யும் பாராட்டாமல், ப்ளேக் தனது காரியத்திற் கண்ணா யிருந்தான். 1870-ஆம் ஆண்டு, தந்தை ஜேம்ஸ் இறந் தார்; குடும்பம் பிரிந்தது. அதே தெருவில் ஒரு வீடு பிடித்து, பார்கர் என்ற நண்பருடன் ப்ளேக் "பார்கர் அண்டு

ப்ளேக் கம்பெனி" என்ற ஸ்தாபனத்தை நாட்டி, படச் சிற்பத் தொழில் நடத்தினன். ஆனால், இக் கம்பெனி கடனில் முடிந்தொழிந்தது. பிறகு யார் கூட்டுமில்லாமல், ப்ளேக் சுதந்தரமாக, தனது மதியூகத்தால்,தொழில் நடத்தினன். அவன் செல்வரைத் துதி செய்யான்; கடவுளைக்கூட வரங் கேளான்.

"இவ்வுலகச் செல்வங்களெல்லாம் சைத்தான் கொடை. அதற்காகக் கடவுளைத்தொழுவது சைத்தானைத் தொழுவதாகும். உளமகிழ்ச்சியான பொன்னும், அன்பு மணியும், சோம்பேறிச் செல்வனல் சந்தைக்குக் கொண்டு வர முடியா. வஞ்சச் செல்வன், இவற்றைப் பெட்டகத்தில் சேர்த்து வைக்கவும் இயலாது. என்ன வந்தாலும் நான் தலை நிமிர்ந்தே நடப்பேன். உண்மையின்பம் பணத்திலில்லை; மனத்திலே யுள்ளது. ஆன்மசுதந்தரமே சுகம்," என்று கருதி, நம் கலைஞன் சுயேச்சையாகத் தொழில் நடத்தினன். மாத்யூ மோட்டியின் சலுகையைக்கூட அவன் ஒருநாள் மறுத்துவிட்டான்; தானே ஓர் அச்சுப்பொறி நிறுவினன்; படக்கட்டைசெய்யவும் படந்தோண்டவும் வேண்டியதை அவனே தயாராக்கினன்; அவனே கவியெழுதினன். தானே அதற்கு அழகான படம்போட்டான்; தானே படச்சிற்பந் தோண்டினன்; கவிதைக்கு அச்சுக் கோத்தான்; அத்துடன் படத்தையும் இணைத்தான், அச்சிட்டான், நிறமிட்டான், விற்றன், வந்ததைக்கொண்டு சமசித்தத்துடன் வாழ்ந்தான்! தனக்கே, ஏற்படுத்திக் கொண்ட அச்சுக்கலையை அவன் "ஜோதி அச்சு" (Illuminated print) என்றன். அவன் அச்சு உண்மையாகவே ஒளிபெற்றது. அவன் வாழ்வையும் ஒளியுறுத்த இதோ ஒரு துணைவி வருகிறள்!

## 12. சுதந்தரக் காதல்

கலையைப் போலவே காதலிலும் ப்ளேக் சுதந்தரம் விரும் பினுன். அவனுக்குக் கலையே சமயம்; கலையே காதல்; காதலே கலை. "காதல், காதல்! மலைக்காற்றைப் போலச் சுதந்தரக்காதலைக் கூவுகிறேன். வாழ்வின் அடியும் நுனி யும் அன்புக்காதல். பரிசுத்தமான ஆண்பெண் காதல் பேரின்பமளிக்கும். காதல் மணமே, நீ வாழ்க! வாலிபர், கன்னிகள், கைம்பெண்கள் எல்லாரும் காதலின் விசால வாசலில் அழகாக நடந்து, அழகான இடத்தில் அமர்கிருர் கள். மானிட சமுதாயத்திற்குப் பாலூட்டும் பெண்மையே, நீ வாழ்க! நீ சமய சஞ்சீவி; நீயின்றி சௌக்கியமில்லை; சந்ததியில்லை. பெண்மை வாழ்க!" என்று பரவசமாகப் பாடுகிருன் நமது கலைக்கவி. இளம் வயதில் அவன் ஓர் அழகியைக்கருதிப் பாடினுன்:—"அருண சுந்தரி போன்ற ஒரு கன்னி எழுந்தாள். அவள் உடல், தெய்வப்பொலி வுடையது. அவள் பேச்சு, சுவர்க்க நாதம்; நாங்கள் இரு வரும் சேர்ந்து நடக்கையில் எந்த அசுத்தமும் அணுகுவ தில்லை. அவள் இருக்குமிடமும் நடக்குமிடமும் ஈடன் போலப் பொலிகின்றன. என் கண்மணிப் பாவையிடம் செல்லும்போது, சீவனில் தெய்வக்கனல் பொலிகிறது; கவியெழுச்சி யுண்டாகிறது."

ப்ளேக் விரும்பியது உடலுடல் ஊடிக்கூடி ஓடிப்போ கும் காமவிகாரமன்று. உயிருயிர் கலந்த ஆன்மநேயத் தையே அவன் விரும்பினுன். "ஆன்மக்காதலே சுதந்தரக் காதல்" என்று அவன் நிரம்பப் பாடியிருக்கிருன்.

# 13. போலி உட் (Polly Wood)

உண்மைக்காதலைத் தேடிய கவிக்கு முதலில் ஒரு போலி உட் மாயவலைவீசி வந்தாள். அவள் உல்லாச சுந்தரி; நாகரிக ஒய்யாரி; வாலிபரிடம் வேடிக்கையும் விளையாட்டுமாயிருக்கும் உல்லாஸி. நல்ல இளம்பொலிவும் கலைத் திறமையும் கொண்ட நமது கவியை அவள் வலைபோட்டாள்; அவனுடன் உலாவினாள்; அவன் படத்தை மெச்சினாள்; பாட்டைக்கேட்டு மகிழ்ந்தாள்; கைகுலுக்கினாள்; நகைமினுக்கினாள். வஞ்சமற்ற ப்ளேக், 'இவள் நம்மை உண்மையாகக் காதலிக்கிறாள்' என்று நம்பினான். ஆனால், அந்தச் சுந்தராங்கியின் செருக்கு, நாளுக்குநாள் வெளிப்பட்டது. அவள் இந்தமாதிரியே பல வாலிபர்களிடம் பழகியதை அறிந்த ப்ளேக், ஒரு நாள் அவளைத் தனியே அழைத்து, "அம்மா, நீ என் மனைவியாயிருக்கப் பிரியமானால், மற்ற வாலிபருடன் சேரக்கூடாது" என்றான். "அது முடியாது" என்று முகத்தைத் திருப்பிக்கொண்டு, வெகு அலட்சியச் செருக்குடன் அந்தத்தோகை இன்னொருவனிடம் ஓடிப்போனாள். போலி உட்டின் போலிக்காதல் புளித்தது.

"சொன்ன காதல் நிலைக்காது. என் காதலை மனம் விட்டுச்சொன்னேன். அவள் பிணங்கி நடுங்கி ஓடிவிட்டாள். ஒரு வழிப்போக்கன் சத்தமிடாமல் அவளை அழைத்துச் சென்றான்" என்று அதற்கொரு பாட்டுப்பாடி வைத்தான் ப்ளேக். இப்பிரிவு அவனைச் சிறிது வருத்தியது. அமைதிக்காக பட்டர்ஸீ என்ற கிராமத்திற்குச் சென்றான் கவி.

## 14. கற்பரசி காதரைன் (Catherine)

பட்டர்ஸீயில் ப்ளேக், வில்லியம் பூஷர் என்ற தோட்டக்காரனுடன் வசித்தான். அவனுக்கு ஒரு பெண்; பெயர் காதரைன்; அவள் இளவழகி, புனிதை; நல்ல குணவதி; தனக்கேற்ற காதலனை நீண்டநாளாக எதிர்பார்த்திருந்தவள். இருவர் கண்ணும் பொருந்தின. கண்டதும் காதல்! வெள்ளைமனத்தனை ப்ளேக், "பெண்ணே, நான் உன்னையே காதலிக்கிறேன்" என்றான். அவள் நாணப்புன்னகையுடன் காதலை ஏற்றாள்; தாயிடம் ஓடினாள்; "இதோ, என் கணவன்!" என்றாள். தந்தையும் சம்மதித்தார். 18—8—1782-ல் பட்டர்ஸீ மேரி சர்ச்சில் காதரைனுக்கும் வில்லியம் ப்ளேக்கிற்கும் திருமணம் நடந்தது. மணமகனுக்கு வயது 24, மணமகளுக்கு 20; சீரியான காதலர். காதரைன் கணவனைத்தவிர வேறெவர் முகத்தையும் பார்த்ததில்லை,

கணவன் இலண்டனில் படச்சிற்பத்தொழில் செய்து போதிய பணம் சேர்த்துக்கொண்டு, மனைவியை அழைத்துச் சென்றான்.

வள்ளுவருக்கு வாசுகிபோல வில்லியத்திற்குக் காதரைன் வாய்த்தாள். அவள் கணவன் மனதிற்கேற்ற மகராசி. இருவரும் ஐம்பதாண்டுகள் உள்ளொன்றி வாழ்ந்தனர். அவன் அவளை, "கேட்" என்றழைத்தான். கேட்டிற்கு முதலில் எழுதப் படிக்கத் தெரியாது; வில்லியமே படிப்புச் சொல்லித்தந்தான்; தனது படத் தொழிலைப் பழக்கினான்; தன் கவிதைகளையும் சித்திரங்களையும் விளக்கி இரசிக்கச்செய்தான்; தன் அத்யாத்மக் கொள்கைகளைப் போதித்தான். அவனே அவளுக்குக் குருவானான். கேட், கணவன் சொல்லித்தந்ததை எளிதாகக் கற்றுக்கொண்டு, அவனுக்கு அரிய துணைபுரிந்து, இணைபிரியாதிருந்தாள். கணவன் பாடுவான், படமெழுதுவான், தியா

னத்தில் ஆழ்வான், தெய்வக்காட்சிகள் காண்பான். "கேட், அதோ தீர்க்கதரிசிகள்; இதோ ஏசுநாதர்! ஆஹா, திவ்யஜோதி! நான் தீர்க்கதரிசி; என்னைப் புது மதம் உபதேசிக்க இறைவன் கட்டளையிட்டான்" என்றெல்லாம் ப்ளேக் விநோதமாகப் பேசுவான். பிறர், 'பிதற்றல்' என்பர். கேட் அனைத்தையும் வியப்புடன் கேட்டு, பயபக்தியுடன் கணவனை நேசித்தாள். இரவில்லை, பகலில்லை; அவன் ஏதாயினும் செய்துகொண்டேயிருப்பான். திடீரென்று, "கேட், வா, வா!" என்பான். மனைவி அன்புடன் வருவாள். அவள் கையைக் கோத்துக்கொண்டு கடற்கரையில் நடப்பான். சிலநாள் நள்ளிரவிலும் இப்படி உலாவி, "அதோ தேவதைகள்; என்னை அழைக்கிறார்கள்!" என்பான். சிலநாள், "கேட், வா, உலாவப்போவோம்!" என்று தன் படங்களையும் நூல்களையும் எடுத்துக்கொண்டு கிளம்புவான்; கிராமம் கிராமமாக விற்பனையும் பார்த்துக்கொண்டு, நாற்பது ஐம்பது மைல்கள் உலாவிவருவான். சிலசமயம் அவள் அயர்ந்துறங்கும்போது, "கேட், வா, வா!" என்பான். அவள் அவசரமாக ஓடிவருவாள். "இப்படி என் பக்கத்தில் உட்கார்!" என்பான். அவள் அப்படியே உட்காருவாள். அவன் பேசாமல் படம்வரைவான், அல்லது தியானிப்பான். இத்திருலீலைகளைத்தவிர அவனுக்கு வேறு கவனம் கிடையாது. வீட்டுக் கவலை முழுதும் காதரைன் பொறுப்பே.

காதரைன் கொல்லைமுதல் வாசல்வரையில் வீட்டைக் கூட்டிச் சுத்தம் செய்வாள்; கடைக்குப்போய்ச் சாமான் வாங்கிவருவாள்; படங்களுக்கு வர்ணச்சாமான்களும் அவளே வாங்குவாள்; காலாகாலத்தில் கணவனுக்கு உணவு தயாரித்து அன்புடன் ஊட்டுவாள்; தான் உண்டதும் நேராகக் கணவனிடம் வருவாள்; படங்களை அச்சிடுவாள், வர்ணமிடுவாள்; கவிதைகளுக்கு நல்ல பிரதி எழுதுவாள். இருவர் கையெழுத்தும் ஒன்றுபோ

விருக்கும்! அச்சிட்ட தாட்களை அவளே தைத்து நூலாக்குவாள்; அவன் உபதேசங்களை உருக்கமாகக் கேட்டு நடப்பாள். ப்ளேக்கின் கவிகளைப் பாடுவதே அவளுக்கு இன்பம்; வேறு நூல்களை அவள் தொட்டதில்லை. சில மாதங்கள் படங்களும் புத்தகங்களும் விலையாகா. வறுமைப்புலி வந்து கௌவும்; தொழில் திகைக்கும். கேட் தன் நகை நட்டுகளைச் சட்டென்று விற்று வர்ணச் சாமான்களும் உணவுச் சாமான்களும் வாங்கிக் கணவன் மனங்கோணுமல் நடப்பாள். வரும்படி வரும் நாளில், வீட்டுச் செலவுக்காகத் தரும் பணத்தில் மனைவி சிறிது மிச்சம்பிடித்து, தேவையானபோது "இதோ பணம்!" என்று தருவாள். உணவுச்சாமான் வாங்கப் பணம் இல்லையானுல், வெறுந்தட்டை அவன்முன் வைப்பாள். அவன் குறிப்பறிந்து பணந்தருவான்; காலட்சேபம் நடக்கும். "கேட், நான் இப்போது மனையிலில்லை; உலகிலில்லை; வானில் கடவுளுடன் இருக்கிறேன் பார்!" என்று தியானவெறியில் ப்ளேக் ஆவேசமாகப் பேசுவான். "ஆஹா, வணக்கம்" என்று மனைவி பக்தியுடன் கேட்பாள். ப்ளேக்கின் வயிரம்பாய்ந்த உள்ளம் எதற்கும் அஞ்சாது; துன்புருது. 1787-ல், அவன் அருமையாக நேசித்துப் பாதுகாத்த தம்பி ராபர்ட் இறந்துபோனுன். "அதோ, தம்பி ஆவி சுவர்க்கத்திற்குச் செல்லுகிறது; பிழைத்தான் பயல்!" என்று அண்ணன் கை கொட்டிச் சிரித்தான்; மூன்றுநாள் பேசாமல் தனி யறையில் கதவை மூடிக்கொண்டுறங்கினுன்; பிறகு காரியத்தைப் பார்த்தான்.

# 15. புரட்சிப் பாட்டு

ப்ளேக் புரட்சி வீரன், புரட்சிக் கலைஞன், புரட்சிக் காதலன். அவன் லாம்பெத்தில் ஒரு சிறு தோட்டவீட்டில் வசித்தான். அதில் ஒரு திராட்சை கொடியோடியிருந்தது. "அதை வெட்டிவிட்டுத் தளிர்க்கச் செய்யலாம்" என்றாள் மனைவி. "நாம் எதையும் வெட்டத் தேவையில்லை; அதன் சுயேச்சைப்படியே அது வளரட்டும்" என்று விட்டுவிட்டான் கணவன். அத்தோட்டத்தில் இருவரும் ஆதாமும் ஏவாளும் போலவே இயற்கையாக வாழ்ந்தனர். நாளைக்கவலை அவனுக்கில்லை. அவ்வப்போது மனத்தில் வந்துமோதும் எண்ணங்களைக் காவியமாகவும் ஓவியமாகவும் எழுதி மனச்சுமையைத் தீர்த்துவிடுவான்; நாளைக்கென்று எதையும் மிச்சம் வைக்கமாட்டான்; மிச்சமிருப்பதை அப்படியே தானம் செய்துவிடுவான். ஏழைகளைக் கண்டால் அவன் உள்ளம் இளகும். ஒருதரம் நூலாசிரியரொருவர் பிழைப்பிற்கில்லாமல் வருந்தினர்; "தம்பி, இன்று நாற்பது பவுன் கிடைத்தது; எனக்குச் செலவிற்கிருக்கிறது; இந்தா, பிழை" என்று அத்தனையும் கொடுத்துவிட்டான். சைத்திரிகனொருவன் படம் விற்காமல் திண்டாடினான். "தம்பி, என்னிடம் வேலை செய்துகொண்டு சாப்பிடு!" என்று அன்புடன் உடன்வைத்து ஆதரித்தான் அருட்கலைஞன். ஒருசமயம் கேட்டும் ப்ளேக்கும் ஐம்பதுமைல் உலாவித்திரிந்து வந்தனர். வீட்டில் கொள்ளை! அறுபது பவுனுக்குப் படக் கட்டைகளும், நாற்பது பவுனுக்குத் துணிமணிகளும் கொள்ளைபோயின. கேட் திடுக்கிட்டு போலீஸில் எழுதி வைக்கச் சொன்னாள். ப்ளேக், "அதனாலென்ன? நம் சகோதரன் ஒருவன் அனுபவித்துப் போகட்டுமே! என்றிருந்துவிட்டான்!

1781-ஆம் ஆண்டு ப்ளேக்கை வறுமைப்புலி கௌவி யது; படம் விற்கவில்லை. கவிதையை யாரும் மதிக்க வில்லை. "கேட், இது கிடக்கிறது......வ-று-மை; நாம் பெருமையாகப் பாடிக்கொண்டிருப்போம்" என்று பாட்டில் பசியை மறந்தான்! அச்சமயம் அரண்மனையில் சித்திரமெழுத இவனுக்கு உத்தரவு வந்தது. "கொழுத்த சம்பளத்துடன் பிரபுக்கள் சலுகையிலும் வாழலாம்; வேலை ஒப்புக்கொள்ளும்!" என்று நண்பர் வற்புறுத்தினர். "ஐயா, அரண்மனைச் சேவகத்தில் தங்கமினுக்குண்டு; ஆனால், தங்கச் சங்கிலியும் விலங்குதானே. மகாப்பிரபுக் களுக்கு வணக்க வொடுக்கமாக, பயபக்தியாக அடங்கி அடிமைத்தொண்டு செய்தாலே அங்கே இடமுண்டு. நான் கடவுளுக்குக்கூட அடிமையில்லையே! நமக்கு வேண்டாமையா, அடிமைத்தனை" என்று உதறித் தள்ளினான் சுதந்தரக் கவி.

பொறாமைக்காரர்கள் சிலர் இக்கவியைத் தூற்றக் கிளம்பினர்: "இவன் தீர்க்கதரிசியாம், சிஷ்யக்கூட்டம் சேர்த்து உபதேசிக்கிறானும், ஹ...ஹ...ஹ! பாரும், வேடிக்கையை, அகம்பாவத்தை!" என்று புரளி செய்தனர். "ஐயா, எனக்குக் குருபீடமும் வேண்டா, சிஷ்யக்கூட்டமும் வேண்டா; நான் சுதந்தரமா யிருப்பேன்" என்று மாணவரை வீட்டிற்கனுப்பிவிட்டு, நண்பரிடமே தன் கொள்கைகளைப் பேசிவந்தான் ஞானி.

ப்ளேக் அரசியலையும் விடவில்லை. அதிலும் தனது சுதந்தர வுணர்ச்சியைக் காட்டினான். 'காற்றும் கடலும் கதிரும்போல மாந்தர் யார் கட்டுப்பாடுமில்லாமல் சுதந் தரமாக வாழவேண்டும்' என்பதே அவன் கொள்கை. சாதி மத சட்டதிட்ட அரசியல் கட்டுப்பாடுகளை யெல்லாம் ஒழிக்கவேண்டுமென்று அவன் தைரியமாகச் சொன்னான்.

இக்காலமே ஐரோப்பாவில் சுதந்தரவுணர்ச்சி பலமானது. ஃபிரெஞ்சுப் புரட்சியும் அமெரிக்கப் புரட்சியும்

இக்காலமே நடந்தன. ப்ளேக் உற்சாகமாக அவற்றை ஆதரித்துப் பாடினான்; 1791-ஆம் ஆண்டில், அவன் ஃபிரெஞ்சுப் புரட்சியைப் பற்றிக் காவியம் எழுதினான். ஜான்ஸன் என்ற வியாபாரி அதன் முதற்பாகத்தை வெளியிட்டான். அதற்குள் ஒற்றர் மோப்பம் பிடித்துவிட்டனர். ப்ளேக்கை, "நீ புரட்சிக்காரன்!" என்றனர் அதிகாரிகள். "நீர் சொல்லித்தானா? நான் எப்போதும் புரட்சிக்காரனே!" என்று பாடத் தொடங்கினான் கவி. சிலர் மிரட்டினர். "ஐயா, நான் கவி; எனக்குப் பூட்டில்லை; கவிக்கு விலங்கு மாட்டினால், அது மனித சமுதாயத்திற்கே விலங்குமாட்டியது போலாகும்; தைரியமாகச் சொல்லுகிறேன். இனி, சாம்ராஜ்யமில்லை; சிங்கமும் ஓநாயும் ஒழியும். இனி மதக்கட்டுமில்லை; உயிர்ப்பதெல்லாம் புனிதமே" என்றான் கவி.

ஃபிரெஞ்சுப் புரட்சியைப்பற்றி அவன் இடி முழக்கம் செய்தான்:

"இடிமுழக்கம்! ஃபிரான்ஸின் காடுமலைகளெல்லாம் கிடுகிடுக்கின்றன. பழைய மந்திரி தந்திரி—சட்டதிட்டம், சுயேச்சாதிகாரச் சின்னங்களெல்லாம் தட்டழிந்து நொறுங்குகின்றன! அரசன் நடுநடுங்கினான்; "ஐயோ, நம் அடிமைகள் சுதந்தர வெளியிலிருந்து விடுதலை முழக்கம் செய்கிறார்களே; எங்கேஒளிவோம்?" என்று அலறி, மந்திரிகளையும் பிரபுக்களையும் சாமியார்களையும் யோசனை கேட்டான். பிரபுக்கள் கண் இரத்தங் கொதித்தது; மந்திரிகள் அடக்குமுறை போட்டனர். சாமியார்கள் அழுகையும் தொழுகையுமா யிருந்தார்கள்; ஒன்றும் பலிக்கவில்லை. ஜனநாயகக் கர்ச்சனை, காதைப் பிளந்தது. "இந்த இராஜத் துரோகிகளைப் போடு சிறையில்!" என்று அரசன் உறுமினான். பஸ்தீல் சிறை நிறைந்தது. இரும்புச் சங்கிலிகள் சுதந்தரவாதிகளை நகையாடின. அரசப் படைகள் இரத்தவாறுருவி நடமாடின. எங்கும் காவல், கவனம்! இருந்துமென்ன? கொடுங்கோலும் கொலையரசும் சுதந்தர தாகத்தை அடக்குமா?

"அச்சமில்லை, அடிமையில்லை; வீழ்க முடியரசு!" என்று குடியரசுக் கொடிதூக்கிப் பொங்கி வந்தது, ஜன சமுத்திரம். பஸ்தீல் தவிடுபொடியானது. தடதட வென்று மின்னிடி போலக் குண்டுகள் பாய்ந்தன. வால்டேர் என்னும் தீமேகமும், ரூஸோ என்னும் இடிமலையும் ஜனநாயக வேகத்தை முந்தி உந்தித் தள்ளின! குதிரைப் படைகள் தடதடத்து வருகின்றன. காலாட்படைகள் மின்னலைப்போல் வாளுடன் வந்து மோதுகின்றன. ஜனக்கடல் அரண்மனையை வளைக்கிறது. மதில்கள் தடதடவென்று இடிந்து விழுகின்றன. புரட்சிவெள்ளம் உள்ளே சண்டவேகத்துடன் பாய்கிறது. முடியரசு, மண்ணில் உருளுகிறது...வாழ்க ஜனநாயகம்!"

அமெரிக்கப் புரட்சியைப்பற்றி ப்ளேக் ஆவேசமாகப் பாடுகிறான்:

"அடிமைச் சுவர்கள் தகர்ந்தன. முழக்குங்கள் சுதந்தர பேரிகை! வாஷிங்டன் கம்பீரமாகத் தலைநிமிர்ந்து நிற்கிறான்; வாழ்த்துங்கள் சுதந்தர வீரனை! அவன் கொடியைப் பின்பற்றுங்கள்! அறுந்தன மனவிலங்குகள். ஆத்திரப்புயல் கிளம்பி, அடிமைத் தனத்தை அழித்தது; சுதந்தரப் பயிர் தலைதூக்கியது. அதை அறுத்தெறிந்து நசுக்க, ஆங்கில நாடு வாட்புயல் போலக் கிளம்பியது. அமெரிக்காவை அத்லாந்திக் கடல் விழுங்கிவிடும்போல் இருந்தது. நடக்குமா? கொதித்தெழுந்தது அமெரிக்கச் சுதந்தரத் தீ! எதிரிகள் முகம் வெளுத்தது. வென்றது சுதந்தரம்! அரியணைகள் குலைகின்றன. ஃபிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி—எங்கும் சுதந்தரத் தீ ஜ்வாலையிட்டு வீசுகிறது. அதை யார் அணைக்கமுடியும்? அஃது அத்யான்மக் கனலாய் ஓங்குக!"

ப்ளேக், ஃபிரெஞ்சுப் புரட்சியில் ஈடுபட்ட வீரர் சிலருக்குத் தைரியமாகப் புகலளித்தான். ஒற்றர் கண் அவன்மேல் விழுந்தது. ஆனால், அவன் தைரியத்தை எவரும் தளர்த்த முடியவில்லை. அவனுக்குப் பகைவர் அதிகம்; நண்பர் சிலரே. ஆனால், அவனை அறிந்து பழகிய நண்பர் அவனிடம் மிக்க அன்பு பாராட்டியே வந்தனர்.

# 16. நண்பர்

ப்ளேக் யாரையும் கடன்கேட்டதில்லை; எவரிடமும் கையேந்தியதில்லை. கலையைக்கொண்டே அவன் மானமாகப் பிழைத்தான். வறுமை, அவனை வருத்தவில்லை. அவன் கையிலிருப்பதைத் தருவதேயொழிய, பிறரிடம் இனமாகப் பெறுவதில்லை. எனினும், நண்பர் சிலர் எப்படியோ அவனுக்குத் தந்திரமாக உதவிசெய்தார்கள். அவருள் தாமஸ் பட்ஸ், லின்னல் என்னும் இருவரும் ப்ளேக்கின் படங்களை உடனுக்குடன் வாங்கிப் பணந்தந்தனர். ப்ளேக் தன் நண்பரைப்பற்றிக் கவியும் வசனமும் எழுதிவைத்திருக்கிறான்; பகைவரையும் பலமாகத் தாக்கியிருக்கிறான். அவன் குறிப்புகளிலிருந்தே சில இங்கே தருகிறேன் :

க. "பரம பிதாவே, எனக்கு ஃப்ளாக்ஸ்மனை நண்பனாகத் தந்ததற்கு நன்றி. மில்டனையும் ஷேக்ஸ்பியரையும் இரசிக்கும் எனக்கு, அவனே ஹோமரின் சுவையை ஊட்டினான். லாம்பெத்திலிருந்து நாங்கள் பெல்ஃபாமில் குடியேறினோம். அங்கே என் வாழ்வை அவனே சுவர்க்கமயமாக்கினான்! சிந்தனையே ரொட்டி, ஆனந்தமே பானமாயிருந்தேன்!"

உ. "என் அருமை நண்பன் தாமஸ் பட்ஸிற்கு:— நண்பா, நான் கவலையை ஒழித்துக் கடல் மணலில் அமர்ந்து, அஸ்தமன சூரியனைப் பார்த்து நான் பரவசங்கொண்டு காட்சிகளெல்லாம் உன்னிடமே சொன்னேன்; நீயே அனுபவித்து என்னை அறிந்தாய்."

* * *

ப்ளேக் பகைவரைக் கண்டித்த பாடல்கள் நகைச்சுவை ததும்பும்; சில துணுக்குகளை இங்கே தருகிறேன் :

க. "பீலி பிடித்தவனெல்லாம் ஓவியனா? முட்டாள்களைப் படமெழுதச்சொல்லி நிரம்பக் கூலி தருகிறார்கள்; பெரும்பாலார் மடையரே. அவர்களுக்குப் புலமை

இன்னதென்று தெரியாது. உதாரணமாக, ஜோஷுவா ரெய்னால்ட்ஸின் படத்தை, மைகேல் ஆஞ்சிலோ படத்திற்குச் சமமாகப் புகழ்கிறார்கள்." (அவனுக்கு மைகேல் ஆஞ்சிலோவையே பிடிப்பதில்லை; அவன் கலையும் ரெய்னால்ட்ஸிடம் இல்லை.)

உ. "நண்பரே, என்னைக் கேலிசெய்கிறீர்; நான் திருப்பி நையாண்டி செய்யமாட்டேன். என்னைப் பைத்தியம் என்றீர்; ஒரே வார்த்தையில் உம்மைச் சுத்த மண்டு என்கிறேன்!"

ந. "ஐயா, நீர் இளமையிலெல்லாம் பொன்வழி (Golden Rule) போற்றினீர்; முடிவில் தங்கமான மடையனாய் (Golden fool) விட்டீர்."

## 17. ஹெய்லி

ப்ளேக்கை ஆதரித்தவருள் ஹெய்லி ஒருவன். ஹெய்லி கேம்ப்ரிட்ஜ் பட்டதாரி, அறிஞன், நல்ல கவி, கல்விமான், இரசிகன், நட்புக்கினியவன், சாது. மூன்றாம் ஜார்ஜ் மன்னன் அவனைச் சமஸ்தான வித்துவான் ஆக்கினான். ஆனால் ஹெய்லி ஆடம்பரமில்லாமல் தன் பெல்ஃபாம் கிராமத்திலேயே வசித்தான்; அவன் கௌப்பரை நேரேபார்த்துப் பழகினவன்; மந்திரி பிட்டிடம் சிபார்சு செய்து, அந்த ஏழைக்கவிக்குச் சன்மானம் வாங்கித் தந்தவன். அவன் கௌப்பரின் வரலாற்றை எழுதினான்; அதற்குப் படம் போடவே ப்ளேக்கை அழைத்தான். ப்ளேக்கிடம் அவனுக்கு அதிக மதிப்புண்டு. நண்பர் ப்ளேக்கைப்பற்றி ஹெய்லியிடம் புகழ்ந்துபேசினர். ப்ளேக்கை அன்புடன்வரவேற்று, கடலோரத்தில் ஒரு தோட்டவீடளித்து ஹெய்லி ஆதரித்தான். பெல்ஃபாம் வாழ்க்கை (1800—1803) ப்ளேக்கிற்குப் பிடித்திருந்தது. அவன் நண்பருக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிக்கிறான்:

"வள்ளல் ஹெய்லியின் அன்பையும், பெல்ஃபாம் அழகையும் நினைக்கும்போதே என் மனைவியின் முகம் பலநிறச் சுடர் விட்டுப் பொலிகிறது ; என் விரல்களிற் கலைக்கதிர் பறக்கிறது. அரண்மனையைவிட இந்த எளிய தூய குடில் இன்பமளிக்கிறது. கிராமம் இலண்டனைவிட மேல். படிக்க ஹெய்லியின் புத்தக சாலை, பார்க்க இயற்கை யழகு, பழக நல்ல நண்பர், செய்ய உயர்ந்த கலைப்பணி, உபசரிக்க வாஞ்சையுள்ள ஹெய்லி—இவ்வளவு போதாதா ? எனக்கு ஏராளமான வேலை கிடைக்கிறது. ஹெய்லியின் பாடல்களுக்கெல்லாம் படம் போடுகிறேன். ஊராரும் படவேலை தருகிறார்கள் ; நிரம்ப வரும்படி வருகிறது; தாராளமாக ஏழைகளுக்குத் தருகிறேன்."

ப்ளேக் செல்வத்தில் மயங்கிவிட மாட்டான். 'செலவிற்கே, ஈகைக்கே செல்வம்' என்பது அவன் கொள்கை. தன் கலையைக்கூட அவன் ஏழைகளுக்கே உபயோகித்தான். டிரஃபால்கர் போரில் இறந்து போன ஒரு வீரன் மனைவி வறுமையால் வருந்தினாள். ப்ளேக் அவ்வீரன் படத்தை அழகாகச் சித்திரித்து விற்று, அந்தப் பணத்தை, "அம்மா, இந்தா என் அன்புக் காணிக்கை" என்று தாயிடம் தந்தான். தாய் வாழ்த்தினாள் !

## 18. ஒருகை பார்த்தான்

ப்ளேக் கொடுமையை எதிர்ப்பான். இச்சமயமே நெப்போலியன் இங்கிலாந்தைப் படையெடுக்கக் கனவு கண்டான். ஆங்கிலத் துறைமுகங்களிலெல்லாம் பலமான படைகள் நின்றன. பெல்ஃபாமிலும் இராணுவப் படை முகாம் போட்டிருந்தது. ஒரு நாள் ப்ளேக்கின் தோட்டக்காரன், ஒரு சிப்பாயைத் தனக்குத் துணையாக அழைத்து வந்தான். ஆங்கிலச் சிப்பாய் தன் தோட்டத்தில் நுழைந்ததை ப்ளேக் வேறு விதமாக எண்ணி, "போ வெளியே!"

என்றான். சிப்பாய் முரட்டுத்தனமாக "முடியாது" என்றான். பேச்சுத் தடித்து, இருவரும் கையோங்கினர். ப்ளேக் சிப்பாயை வேலிக்கு வெளியே பிடித்துத் தள்ளினான்; சிப்பாய் கண்டபடி வைதான். ப்ளேக் அவனை உதைத்துத் துரத்தினான். இருவருக்கும் வாய்ப் போரும் கைப் போரும் நடந்தன. அதைக்கண்ட இராணுவச் சிப்பாய்கள் ஓடிவந்து ப்ளேக்கை வைது மிரட்டினர். "இதுதான் வீரமோ?" என்று ப்ளேக் கண்டித்தான். அவன்மேல் காரங்கொண்ட சிப்பாய், "இவன் புரட்சிக்காரன்; அரசரைத் தூஷித்தான்" என்று வழக்குத் தொடுத்தான். சிச்செஸ்டர் நீதி மன்றத்திற்கு வருமாறு அழைப்பாணை வந்தது. மனைவி அஞ்சினாள்; நண்பர் வருந்தினர். ப்ளேக் "பார்க்கிறேன் ஒருகை!" யென்று முண்டாத் தட்டிச் சென்றான். நல்ல வேளையாய் ஹெய்லியே வழக்குச் செலவு தந்து சரியான சாட்சிகளைக் கொண்டுதவினான்.

சிப்பாய், "இவன் முன்பே சிவப்புக்குல்லாய் போட்ட புரட்சிக்காரன். 'அரசனுடைய வீரர் ஒழிக; இராணுவச் சிப்பாய் ஒழிக; நெப்போலியன் வந்து இவர்களைச் சக்கையாக வெளுப்பான், வெளுக்கட்டும்; நான் நெப்போலியனுக்கே உதவி செய்வேன்' என்றான். இவன் பெரிய இராஜத்துரோகி!" என்று கயிறு திரித்தான்.

ப்ளேக், "சுத்தப் புளுகு! இந்தச் சிப்பாயின் அயோக்கியத்தனத்தைக் கண்டித்தேன், கண்டிக்கிறேன்" என்று சத்தமிட்டான். மன்றமே நடுங்கிப் போனது. ஹெய்லி தக்க சாட்சிகளைக் கூட்டிலேற்றிப் பரிந்து பேசினான். வக்கீலும் தாங்கிப் பேசினார். விடுதலை கிடைத்தது. ஹெய்லி நமது கவிக்கு ஒரு விருந்து வைத்தான்; கிராமத்தார் மிக்க மகிழ்ந்தனர்!

வந்த காரியம் முடிந்தது. கௌப்பருக்கும், ஹெய்லி பாடல்களுக்கும் படம்போட்டாயிற்று. ப்ளேக் ஹெய்லி

யிடம் நல்விடை பெற்றுக்கொண்டு, 1803 செப்டம்பரில் இலண்டன் வந்து, 17, ஸௌத் மூல்டன் தெருவில் குடியேறினன்.

## 19. போட்டிப் பகைவர்

ப்ளேக், மகா தைரியமான சிந்தனைக் கலைஞன்; நிமிர்ந்து நடக்கும் ஞானி; உலகை அஞ்சாமல் மனச்சாட்சியைப் பின்பற்றும் தீரன்; மதக் கட்டுப்பாடுகளையும் மூடக்கொள்கைகளையும் உதறி யெறிந்து, தன்கொள்கைப்படியே நடந்த சீர்திருத்தவாதி. ஒருவரையொருவர் ஏமாற்றும் புரட்டுகளை அவன் வெட்ட வெளிச்சமாக்கிவிடுவான். சித்த சுத்தியுடன், உள்ளன்புடன், அவனிடம் செல்லவேண்டும். எத்தனை பேருக்கு அத்தன்மை இருக்கும்? ஐந்தாறு அறிஞரே அவனை அறிந்தவர்: மற்றவர்கள் எதிரிகளாகவே யிருந்தனர்; "கிடக்கிறன், பித்துக்கொள்ளி" என்றே அசட்டை செய்தனர். ஆனல், அவனிடம் தந்திரமாக வேலை வாங்கிக்கொண்டு துரோகம் செய்த சிலரை நாம் மன்னிக்க முடியாது.

ப்ளேக் புது மாதிரி நீர்வருணப் படங்கள் எழுதத் தொடங்கினன். "வாழ்வாறு" (River of Life) என்னும் அவன் படம் புகழ்பெற்றது. அவன் கலையால் வயிறு வளர்க்கச் சில வஞ்சகப் பேர்வழிகள் புறப்பட்டனர். அவருள் குரோமெக் (Cromeck) ஒரு பலே எத்தன். "புலவரே, உம் படங்கள் என்னை மயக்கிவிட்டன; என் படப் பத்திரிகைக்கும், நான் வெளியிடப் போகும் ராபர்ட் ப்ளேரின் 'கிரேவ்' (Grave) என்ற பாட்டிற்கும் படம் போடும்; தக்க ஊதியம் தருகிறேன்" என்றான். ப்ளேக் அழகான படம் போட்டான். புத்தகமும் சஞ்சிகையும் ஏராளமாக விற்றன. பேர்வழி மற்ற எழுத்தாளருக்கெல்லாம் பத்திரிகை

யில் நன்றி செலுத்தினன். ப்ளேக்கைப்பற்றி ஒரு வரிகூட எழுதவில்லை; வயிற்றெரிச்சல்! ப்ளேக்கின்மேல் பொருமை கொண்டு அவனுக்குப் போட்டியாக ஸ்டாதாட் என்னும் ஓவியனைத் தூண்டிவிட்டான். ப்ளேக், சாஸர் பாடிய "காண்டர்பரி கதைகளு"க்குப் படம் போட்டான். அதை அற்பவிலைக்குக் கேட்டான் குரோமெக். ப்ளேக் மறுத்தான். உடனே குரோமெக் பகைத்தான்; ஸ்டதாடைத் தூண்டிப் போட்டிப்படம் போட்டுப் பெரிய விளம்பரம் செய்து ஒரு காட்சிசாலைகூட ஜோடித்துவிட்டான். அதனுடன், "உன்னைக் கைதூக்கிவிடலாம் என்று நினைத்தேன்; உன் அதிகப் பிரசங்கித்தனத்தால் என் சலுகையை இழந்தாய்; திண்டாடு தரித்திரத்தில்!" என்று குரோமெக் கடிதமும் எழுதிவிட்டான்.

சும்மா விட்டானு ப்ளேக்? "குரோமெக், சுத்த ஹம்பக்; கலைவாணரை ஏமாற்றி வயிறு வளர்க்கிருன்" என்று பாட்டுப் போட்டான்; தன் அழகான படங்களை அண்ணன் ஜேம்ஸ் நடத்திய கடையில் காட்சி ஜோடித்து வைத்தான்; தன் படங்களைப்பற்றியும் கலையைப்பற்றியும் அழகான நூல் எழுதினன். ஆனல், அவன் காட்சி சாலைக்கு கிராப் ராபின்ஸன் என்ற நண்பனொருவனே வந்தான். இவனே பிற்காலம் ப்ளேக்கின் வரலாற்றைக் குறித்தவன். பத்திரிகைகள் ப்ளேக்கை மதிக்கவேயில்லை. "துரதிட்டப் பைத்தியம்" (Unfortunate Lunatic) என்று சிலர் கேலி செய்தனர். அவன் படத்தைக்கண்டதும் கண்ணை மூடிக்கொண்டு, "ஆபாசம்" என்றனர் சிலர். படத்தின் உள்ளேயுள்ள தத்துவத்தை அவர்களால் அறிய முடியவில்லை. பொதுவாக அவனைப் "பைத்தியம்" என்றே அக்காலத்தவர் கேலிசெய்தனர்.

## 20. அன்பு லின்னெல் (John Linnell)

ப்ளேக்கை உள்ளுற அறிந்த நண்பன், லின்னெல் ஒருவனே. ஜான் லின்னெல் படித்த கலைஞன், இருபத்தாறு வயதுக் காளை; கொஞ்சம் பசையுள்ளவன்; ஈர நெஞ்சன்; 1818-ஆம் ஆண்டு தனது இயற்கை வர்ணனைக் கட்டுரைகளுக்குப் படம் வரைய பிளேக்கை வேண்டினான். அன்றுமுதல் இருவரும் நண்பராயினர். தாந்தேயின் திருக்காட்சிக்கு ப்ளேக்கைக்கொண்டு படம் வரைந்து, வாரம் மூன்று பவுன் தந்துவந்தான். "ப்ளேக்கு அரிய அருளறிஞன்; அவனைப்போல நேர்மையான அன்புள்ள நண்பர் கிடைப்பது அரிது" என்றான் லின்னெல். அவன் அடிக்கடி ப்ளேக் தம்பதிகளை அழைத்து உபசரித்தான்; செல்வருக்கெல்லாம் அறிமுகப்படுத்தினான்; அவன் படங்களை ராயல் அகாடமியில் காட்டிப் பரிந்து பேசி, இருபத்தைந்து பவுன் சன்மானம் வாங்கித் தந்தான். லின்னல், ப்ளேக்கை சாரட்டில் அழைத்து வந்து நண்பருடன் அமர்ந்து உபதேசங் கேட்டான். ப்ளேக் தன்கொள்கைகளையும் அருட்காட்சிகளையும் பரவசமாக விளக்கிவந்தான்.

டாக்டர் தாரன்டன், கால்வொர்த், டாதாம், ரிச்மாண்ட் முதலிய நண்பர் அவனிடம் பயபக்தியுடன் உபதேசம் கேட்டனர். இச்சமயமே அவன் வேர்ட்ஸ் வொர்த்தைப் படித்து, வேர்ட்ஸ் வொர்த்திடம், "அத்யாத்ம மனிதனுக்கெதிராக இயற்கை மனிதன் கிளம்புகிறான்" ("Natural Man rising up against Spiritual Man") என்றான். இந்த எழுபதுவயதுக் கிழக்கலைஞனை, அருட்புலவனை அறிந்து உண்மையாகப் போற்றியவர் ஐந்தாறு பேர்களே.

## 21. பாடிக்கொண்டே இறந்தான்!

வயதின் சுமை உடலை வருத்தியது. வயிற்று நோயால் இழக்கவி படுத்தான். ஆனால், அவன் மனம் என்றும் இளமையாகவே யிருந்தது. கவலையென்பதே யில்லை; உடல் படுக்கையில் படுத்தது. ஆனால், பீலியும் பேனாவும் ஆடிக்கொண்டேயிருந்தன. நாக்கு பெருவாரியாக உபதேசங்களைப் பொழிந்து கொண்டிருந்தது. கடைசிக் காலத்தில் ப்ளேக் நகைச்சுவை ததும்ப மனிதர் குணக்கேடுகளை வருணித்தான்; "சாவென்பது ஓர் அறையிலிருந்து இன்னோர் அறைக்குப் போவதுபோலத்தான்; அதைப்பற்றிப் பயமே யில்லை!" யென்றான். நோய் முதிர முதிர, படத்தின் அழகும் கவியழகும் முதிர்ந்தன. பாட்டு, பாட்டு, கணக்கற்ற பாட்டு!

ஒருநாள் டாதாமுக்காக "பண்டை நாள்" (Ancient Days) என்ற அழகான படம்போட்டு முடித்ததும், "இந்தா போதும்!" (There, that will do) என்று பீலியை அப்படிப் போட்டான். பத்தினி காதரைன் எதிரே நின்றாள். "நில் அப்படியே; நீ என் அன்புத் தேவதை; உன்னை வரைகிறேன்!" என்றான்; மனைவியின் படத்தை விரைவாகவும் அழகாகவும் வரைந்து முடித்தான். "என்னை பர்ன் ஹில் ஃபீல்டில் (Burn Hill Field) புதையுங்கள்!" என்றான்; வேறு பேச்சில்லை; நாளெல்லாம் ஓயாமல் கடவுளையே பாடினான்: "இறைவா, ஒருவா, என் உள்ளத்தாய், உன்னை உள்ளே கலந்துவிட்டேன்! இனி எனக்கு எந்தக் கோயிலும் புரோகிதரும் தேவையில்லை; உன்னுணர்வே என் இன்பம்! இதோ, உன்னுட் கலந்துவிட்டேன்! இந்தக் கூட்டைவிட்டுக் கிளி பறக்கச் சிறகடிக்கிறது; கதவும் திறந்தது. இறைவா, வருகிறேன்" என்று உரக்கப் பாடினான்! "ஆ, சுவர்க்கக் காட்சி, ஆனந்தம்!" என்றான்;

கண்ணை மூடினன்; பிறகு திறக்கவில்லை; பேச்சு மூச்சில்லை.

12-8-1827-ல் ப்ளேக் இறந்தான். நண்பர் ஆருத் துயருடன் அவன் உடலைக் குறித்த இடத்தில் புதைத்தனர். 1831-ஆம் ஆண்டு காதரைனும் இறந்தாள்; அவளையும் அதே இடத்தில் புதைத்தனர். அந்த இடம் புல்முளைத்துப் போயிற்று; அடையாளம் தெரியவில்லை. ப்ளேக் தம்பதிகளுக்கு மக்களில்லை. கலையும், கவியுமே அவர்கள் சந்ததிகள். அவன் படங்களிலும் நூல்களிலும் சில தீக்கிரையாயின; மீதியை டாதாம் கைப்பற்றிக் கொண்டான். காலத்தால் சிந்திச்சிதறி, எஞ்சிய சில கவிதைகளும் படங்களுமே இன்று உலகில் பெருஞ் செல்வாக்குப்பெற்று விளங்குகின்றன. படங்களை ஆராய்ச்சி நூல்களிற் காண்க.

ப்ளேக்கின் கவிக் குறிப்புகளையும், மணிமொழிகளையும் இனிச் சிறிது நுகர்வாம்:

# உ. கவிக் குறிப்புகள்

"How sweet I roamed from field to field
And tasted all Summer's pride
Till I the Prince of Love beheld
Who in the sunny beams did glide." (*Poetical Sketches*)

இதுவே, ப்ளேக் பாடிய முதற் செய்யுள்: "நான் வயலுக்கு வயல் திரிந்தேன்; வேனிலைப் பெருமை செய்யும் அழகை யெல்லாம் நுகர்ந்தேன்; சூரியக் கதிர்களில் அன்பரசன் ஊர்ந்து செல்லக் கண்டேன்!" என்கிறான் ப்ளேக். "சூரியனில் எவன் ஜோதியாய் விளங்குகிறானோ, அவன் என் உள்ளும் விளங்குகிறான்" என்று நமது வேத ரிஷிகளும் பாடியுள்ளனர்.

பருவ காலங்கள், காலை மாலைக் காட்சிகள், பூம்பொழில்கள், வயல்கள், குழந்தைகள், குழந்தை விளையாடல்கள், மாந்தர் நடையுடை பாவனைகள்—எல்லாம் ப்ளேக்கின் காட்சிப் புலமையினின்று காவியச் சித்திரங்களாக எழுந்து நிலவுகின்றன. அக்கவிகள், பிஞ்சுக் கவிகள்; தாய்மாரும், குழந்தைகளும் பாடியாடும் குஞ்சுக் கவிகள். எனினும், அவற்றுள் சிறந்த ஞானியரும் பருகும் பொருட்சுவையும் கலந்திருக்கின்றன. அக்கவிகளின் கருத்துரையைச் சுருக்கமாகக் காண்போம்:

**காலை:**

"தூய வெள்ளுடை யணிந்த புனிதக் கன்னியே, விண்ணின் பொற்கதவைத் திறந்து வா; வானில் அருணன் உறங்குகிறான்; தட்டி யெழுப்பு. கிழக்குக் கறைகளிலிருந்து நின் ஒளி வீசி யெழுந்து பரவுக! காலையே, வேட்டைக்குப் புறப்படும் வேடுவன் போலச் சூரியன் எழுந்தான்; அவனை வணங்கு."

**அந்தி நக்ஷத்திரம் :**

"சூரியன் அஸ்தமன கிரியில் மறைகிருன். கூந்தலழகீ, அந்தி மீனு, உன் அன்புத் தீவர்த்தியைக்கொளுத்து; ஒள்ளிய மகுடந் தரித்து, எங்கள் பள்ளியில் புன்னகை பொழி; எங்கள் காதலில் புன்னகை வீசு; கண் மூடியுறங்கும் மலர்களில் உன் வெண் பனியைப் பொழி; கண் சிமிட்டி மௌனத்திரு; அந்தி மங்கலில் வெள்ளி பூசு!"

**வசந்தம் :**

"வசந்தமே, கிழக்கு மலைமேல் வா; எங்கள் காற்று, உன் மணமேறிய உடைகளைக் கொஞ்சட்டும்; உன் காலை மாலைக் காற்றை நாங்களும் உயிர்க்கச் செய்; உன் மேல் காதல் நோய் கொண்ட எங்கள் நாட்டில், உன் முத்துக்களை வாரி யிறை; உன் அழகிய விரல்களால் அவளை (நாட்டை) அலங்கரித்து, அவள் மார்பில் உன் மெல்லிய முத்தங்களை முத்திரை வை."

**சுதந்தரமே !**

"சுயேச்சையால் தைரியம் உண்டாகிறது; 'நான் சுதந்தரன்; கட்டற்றவன்' என்று மனிதன் நினைக்கச் செய். அடிமைக்குச் சுயேச்சை தா; அடிமைத் தளையை உடைத்தெறி; உடனே மனிதன் சோம்பலை விட்டுத் தன்னைக் காத்துக்கொள்வான்; தனக்கு வீடும் வேலியும் கட்டிக்கொள்வான். சுதந்தரம் பிறப்புரிமை; அதுவே வினைத்திறன். சுதந்தரமே, உன் பெருமை என்னே!"

**தியானம் :**

"அருணப் புதல்வி, இயற்கை வனத்தில் உலாவுகிருள்; அவள் நடை, கம்பீரமாயிருக்கிறது! மலர்களிலெல்லாம் அவள் ஞானத்தை எழுதி வைக்கிருள். அவள் என் காதில், "மனிதா, நீ எவ்வளவு பெரியவன்! ஆனுல், எவ்வளவு சிறுமையுற்றிருக்கிருய்! மனிதா, நீ அமரன்

நித்திய வாழ்வின் தலைவன்; நீ ஏன் நேரங்களுக்கு அடிமையாயிருக்கிறாய்?'' என்று காதில் ஓதுகிறாள்.''

இன்பம்:

''மெய்யின்பத்திற்கு, ஆ! எவ்வளவு எளிய வுடை! மெய்யின்பம் வேண்டுவோர், எளிமை பூண்டு இயல்பாகத் தேடுக; எங்கும் அது மலர்ந்து மணக்கிறது!''

* * *

''உனக்கு நீ தலைவனாயிரு; எல்லாருக்கும் தலைவனாவாய்.''

* * *

''என்னைச் சுற்றிலும் இன்ப மலர்ச்சி! எத்தனை அழகுகள் என் இன்பத்தைத் தூண்டுகின்றன! பசும் புல் இன்பந் தளிர்க்கிறது; மெல்லிய காற்று, இலைகளை முத்தமிடுகிறது; 'வெல்வெட்'—மைதானத்தில் பளிங்கு போன்ற ஓடை, கைகளைப் பரப்பித் தவழ்கிறது; அதன் வெள்ளிப் புனல், பசும் வயல்களை ஊட்டி விளையாடுகிறது. இளங் கதிரவன் வானில் தாவிப் பகல் செய்கிறான். அவனொளி, விண்ணும் மண்ணும் விளங்குகிறது. பருவ காலங்கள், தொடர்ந்து வெற்றி கொட்டிப் பவனி வருகின்றன. எங்கும் காற்றின் பாடல்; இயற்கையின் ஆடல்; எங்கும் இன்பம்!''

துன்பம்:

''இன்பத் தேவதையே, நான் நரச்சட்டை பூண்டிருக்கிறேன்—என் ஊன், சிறையாயிருக்கிறது. என் எலும்புகள், சாவின் சிறைக் கம்பிகளாயின. இந்தச் சிறு குடிலுக்குத் துன்பமே கூரை வேய்கிறது; அதிருப்தி, அதைச்சூழ்ந்து ஓடுகிறது. குழந்தைப் பருவத்திலும் விசனம் என்னுடன் தொட்டிலில் உறங்கியது; என்னுடன் கூடவே வீட்டில் வளர்ந்தது; என் பள்ளித் தோழனானது; என்னுடன் நடந்தது; ஆடியது. இவ்வாறு விசனம் என் சகோதர

ளுய் விட்டது. அவனுடன் நான் பாலைநிலத்திலும் நடந்தேன்; சர்ச்சிலும் புகுந்தேன். கல்லறைமேல் இனி நான் என் சகோதரனை விசனத்துடன் அமர்ந்திருப்பதாக நினைக்கிறேன்.'' [உள்ளத்தில் அன்புக் கனலுடன், அறமே ஊன்றுகோலாய் உண்மை ஒளியில் நடந்தால், உடலை நடுக்கும் கடும்புயலையும் சமாளிக்கலாம்.]

*      *      *

ப்ளேக் உண்மையான உள்ளெழுச்சியால் இயல்பாகப் பாடினான்; சந்தமும் எதுகையும் எளிதாக அமைத்தான். எளிய சொற்கள், எளிய நடை என்றாலும், அவன் வாக்கில் ஆழ்ந்த உட்பொருள் இருக்கும். அதை அனுபவித்தே அறியவேண்டும், ஓர் எடுத்துக் காட்டு :

* " இனிய மே-பனி (May - dew) என் சிறகுகளை ஈரமாக்கியது; சூரியன் என் ஆர்வக்குரலுக்குக் கனலேற்றினான்; தன் பட்டு வலையில் என்னைப் பிடித்து, அவனது தங்கக் கூண்டில் அடைத்துவிட்டான்.''

ஆ, இளங்கவியின் யூகம், எப்படி சூரியக் கூண்டில் பறவைபோலப் பாய்ந்தேறுகிறது! இளம் வில்லியம், காற்றிலும் ஆற்றிலும், கடலிலும், கவிக்கனவுகள் மிதந்து வரக் கண்டான்; மலரிலும் சுடரிலும் அக்கனவுகள், இன்பப் புன்னகை புரியக் கண்டான்; வனங்களிலும், புல்வெளிகளிலும் தேவதைகள் நடமாடக் கண்டான்!

## மாசிலாப் பாடல்கள்

## (Songs of Innocence)

கவியின் " மாசிலாப் பாடல்கள் " குழந்தை யுள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. குழந்தைகளும்

---

*" With sweet May-dews my wings were wet
And Phoebus fired my vocal rage ;
He caught me in his silken net,
And shut me in his golden cage."—(*Earliest Poems*)

தாய்மாரும் விரும்பிப் பாடும் அப்பாடல்கள், குழந்தை யுள்ளம் போலும், தாயன்பு போலும் மாசற்றவை: கவி, மலைக் கணவாய்களில் ஆனந்தமாகக் குழலூதிப் பாடித் திரிகிருன். மேக மண்டலத்திலிருந்து ஒரு குழந்தை அவனைப் பார்த்து மகிழ்வுடன் நகைத்து, "ஆட்டுக் குட்டியைப் பற்றி ஒரு பாட்டுப் பாடு" என்கிறது; கவி, பாடுகிருன். குழந்தை, மறுபடி பாடச் சொல்லுகிறது; பாடுகிருன் கவி. பிறகு, குழலைக் கீழே போட்டு வாய்ப் பாட்டுப் பாடச் சொல்லுகிறது; கவி, அப்படியே செய் கிருன். பிறகு, "உன் பாட்டை யெல்லாம், எல்லாரும் படிக்கும்படி ஒரு புத்தகத்தில் எழுதிவை" என்று சொல் லிக் குழந்தை மறைகிறது. கவி, பேனுவை எடுத்து மை தொட்டு எழுதுகிருன்—எல்லாக் குழந்தைகளும் சந்தோ ஷமாகத் தன் பாட்டைக் கேட்கவே எழுதுகிருன். இதுவே "மாசற்ற பாடல்க"ளின் முன்னுரை. இப் பாடல்களில் காணும் தனியழகை இங்கே எடுத்துக் காட்டுகிறேன்:

வானம்மகிழச் சூரியன் உதிக்கிறது! வசந்தத்தை வரவேற்றுச் சந்தோஷ மணிகள் கிணுகிணுக்கின் றன. மணியின் இனிய ஓசைக்குமேல் வானம்பாடி முதலிய புட்கள் பாடுகின்றன. தாத்தா ஜான், கிழ வர்களுடன் 'ஓக்' மரத்தடியில் அமர்ந்து, தன் கவலை போகச் சிரிக்கிருர்! சூரியன் அஸ்தமிக்கிறது; குழந் தைகள் விளையாடிக் களைத்து வீட்டுக்குப் போகிருர் கள். அவர்கள், பறவைகள் கூட்டிலடங்கித் துயில் வதுபோல், தாய்மார் மடியில் உறங்குகிருர்கள்!

—*The Echoing Green*

* * *

"எனக்குப் பெயரில்லை; ஆனுல் எனக்கு இரண்டு வயது; உன்னை எப்படி அழைப்பது?"

—"நான் இன்பமாய் இருக்கிறேன்; என் பெயர் இன்பம்!"

—உனக்கு இன்பமாகுக! நீ சிரிக்கிறாய்; நான் பாடுகிறேன். உனக்கு இன்பமாகுக!"

—*Infant Joy*

* * *

" என் தாய் என்னைத் தென்காட்டில் பெற்றாள்; நான் கறுப்பு: ஆனால், என் ஆன்மாவோ வெளுப்பு; வேனில் மர நிழலில் அமர்ந்து என்னை மடிமேல் வைத்துக் கொஞ்சி, என் தாய் கிழக்கே காட்டிச் சொன்னாள்: *உதய சூர்யனைப் பார்! அதில் கடவுளிருந்து, ஒளியும் வெப்பமும் அளிக்கிறார்! அதனால் மலர்களும் மரங்களும் மாந்தரும் விலங்குகளும் காலையில் சுகமும், மாலையில் களிப்பும் அடைகிறார்கள்...... அவனுடைய அன்புக் கதிர்களைத் தாங்கவே நாம் உலகில் இச்சிற்றிடத்தில் இருக்கிறோம். இந்தக் கரிய உடலும், வெயிலால் கறுத்த முகமும், ஒரு மேகம் போலும்; அல்லதோர் நிழற்சோலைபோலும்...

ஆன்மாக்கள் வெப்பத்தைப் பொறுக்க முடிந்தவுடன், மேகம் மறையும்; அப்போது, 'என் கண்மணிகாள், சோலையினின்று வாருங்கள்; என் தங்கக் கூடாரத்தைச் சுற்றிலும் அமர்ந்து ஆட்டுக் குட்டிகள்போல் இன்பமயமாயிருங்கள்' என்னும் அவன் குரலைக் கேட்போம்!...

இந்த மாதிரி என் தாய் என்னைக் கொஞ்சிச் சொன்னாள். இதே மாதிரியே நான் நமது ஆங்கிலச் சிறுவருக்கும் சொல்லுகிறேன்: நான் கருமேகத்தினின்றும், அவன் வெண்மேகத்தினின்றும் விடுபட்டால், கடவுளின் கூடாரத்தைச் சுற்றி நாம் ஆட்டுக்குட்டிகள் போல் சந்தோஷமாயமர்ந்திருப்போம்." —*The Little Black Boy*

* * *

---

* 'Look on the rising sun,—there God does live,
And gives His light, and gives His heat away;
And flowers and trees and beasts and men receive
Comfort in morning, joy in the noonday.'

* கருணை, இரக்கம், அமைதி, அன்பு—இவையே நமது பரம பிதா, கடவுள். கருணைக்கு மனிதவுள்ளம், இரக்கத்திற்கு மனித முகம், அன்பிற்குத் திவ்ய மானிட வடிவம், அமைதிக்கு மனித வுடையுண்டு...(ஆதலால்) † கருணை, அன்பு, இரக்கம் இருக்குமிடம், கடவுள் இருக்கிறார்!" —*The Divine Image*

இந்த மாசற்ற பிள்ளைக் கவிகள், அழகான படப் பொலிவுடன் வெளி வந்ததும், ஆங்கில நாடு தனது புதுக் கவியை அறிந்துகொண்டது. ஆனால் அடுத்தபடி "அனுபவப் பாடல்கள்" (Songs of Experience) வந்ததும், "சை, பைத்தியம், உளறுகிறது" என்றனர் விமர்சகர்.

---

* "For MERCY has a human heart,
Pity a human face,
And Love, the human form divine,
Love, Mercy, Pity, Peace."

* * *

* Where Mercy, Love, and Pity dwell
There God is dwelling too."— *The Divine Image*

## ௯. மணி மொழிகள்

(*Pithy Sayings*)

---

**1789-1800** ; பதினோராண்டுகள் ப்ளேக் கவிமாரி பொழிந்தான். முன் சொன்னவற்றைத் தவிர, 1. TIRIEL, 2. THE BOOK OF THEL, 3. The Marriage of Heaven & Hell 4. The French Revolution, 5. The song of Liberty (சுதந்தர கீதம்), 6. Visions of the Daughters of Albion, 7. America: A Prophecy, 8. Europe : A Prophecy, 9. The (First) Book of Urizen, 10. The song of Los, 11. The Book of Los, 12. The Book of Ahania, 13. Selections From 'The Four Zoas', 14. Selections From 'Milton', 15. Selections from 'Jerusalam', 16. Verses From 'The Gates of Paradise', 17. The Ghost of Abel முதலியன முதன்மையான கவிதைகள். அனைத்தும் ப்ளேக்கின் கொள்கைகளை விளக்கும் பாடல்கள். அத்துடன், உலகின் சுக துக்கங்களையும் அவை படம் பிடித்துக் காட்டுகின்றன. உதாரணத்திற்கு அங்குமிங்கும் தேர்ந்து சில வரிகளைக் காண்போம்:

1. பகைவரை நேசிப்போன், நண்பரை வஞ்சிக்கிறான்.

  " He who loves his enemies, betrays his friends."

2. நீயும் அமரத் தன்மையில் வசிக்கிறாய் ; நீ மனிதன் ; உன்னையன்றிக் கடவுளில்லை (" தத்வமஸி, அதுவே நீ ") ; உன் மனிததத்துவத்தை வழிபடப் பயில்; ஏனெனில், அதுவே என் வாழ்வின் கருத்து; விழி, ஆன்மீகப் போருக்கெழு ! [கருத்து :—மனிதனுள் மனிதன் சுத்தான்மா ; அது நித்தியம், சத்தியம், நிர்மலம் ; அதுவே ஒவ்வொருவரிடமும் உள்ள கடவுள். அதை அறிந்தால், கடவுளை அறிதலாகும். தன்னறிவே, கடவுளறிவு ; தன்னை அறிந்தவனுக்கு அன்னிய பாவனையில்லை. அவன், அனன்ய சேதனனாக, தானே தானாகத் தன்னுணர்வுடன் (Self Consciousness) தலை நிமிர்ந்து வாழ்கிறான். இந்த ஆன்ம வுரிமையை நிலைநாட்டினால் வேறுபாடுகளுக்கு இடமில்லை.]

"Thou also dwell'st in Eternity ;
Thou art Man ; God is no more.
Thy own Humanity learn to adore,
For that is My Spirit of Life,
Awake, arise to Spiritual strife !"

3. கெட்ட நோக்கத்துடன் சொன்ன உண்மை நீ கட்டிய பொய்களை யெல்லாம் தோற்கடிக்கிறது. (தீமையிலாது சொல்லலே வாய்மையாகும்.)

"A truth that is told with bad intent
Beats all the lies you can invent."

4. தெய்வான்மாவிற்கு இன்ப - துன்பம், (பாவும் ஊடுமாக) நேர்த்தியாய் செய்த ஆடையாகிறது.

"Joy and woe are woven fine
A clothing for the soul divine."

5. சந்தேகத்திற்குப் பதில் சொல்லுகிறவன், அறிவு விளக்கை அணைக்கிருன். [அவரவர் உள்ளாழ்ந்து சிந்தித்து ஐயத்தைப் போக்குதலே, அறிவு நெறி.]

"He who replies to words of Doubt
Doth put the Light of Knowledge out."

6. கண்ணுரக் கண்டதைச் சந்தேகிப்பவன், என்ன செய்தாலும் உன்னை நம்ப மாட்டான்.

"He who doubts from what he sees,
Will never believe, do what you please."

7. (க) எதிரிடைகளில்லாமல் முன்னேற்ற மில்லை...
"Without Contraries, there is no progression.'

* * * *

(உ) கவர்ச்சி, விலக்கு, புத்தி சக்தி, விருப்பு வெறுப்பு—இவை மனித வாழ்விற்கு வேண்டும். இவற்றினின்றே நன்மையும் தீமையும் உண்டாகின்றன. நன்மை, புத்தியைப் பணியும் அமைதியான தத்துவம் ; தீமை, சக்தியிலிருந்தெழும் தீவிர தத்துதம். நன்மை, சுவர்க்கம் ; தீமை, நரகம்.

"Good is Heaven. Evil is Hell."

—*The Marriage of Heaven & Hell* (*Argument*).

8. க. ஆன்மாவிற்கு வேருக மனிதனுக்கு உடலில்லை. ஐம்பொறிகளும் ஆன்மாவின் வாயில்கள்; அவற்றின் மூலம் காணும் ஆன்மப் பகுதியே உடல். ("Man has no body distinct from his soul.")

உ. சக்தியே உயிர்; அது அந்த உடலிலிருந்து வருவது. புத்தி, சக்தியைச் சூழ்ந்திருக்கிறது. ("Energy is the only life and is from the Body, and Reason is the bound or outward circumference of Energy.")

ந. சக்தி, நித்தியானந்தம் ("Energy is Eternal Delight.") —*The Voice of the Devil.*

9. ஆசையைத் தீர்த்துக் கொள்ளாதவன், கொள்ளை நோய் விளைவிக்கிருன். (தீரா ஆசை தீயநோய்.) ("He who desires but acts not, breeds pestilence.")

* * *

10. பெரிய காரியங்கள், மலை போன்ற தெய்வப் புலவரும், அறிவறிந்த மனிதரும் கூடியே நடக்கும்; தெருவில் இடித்துப் புடைத்துச் செல்வதால் நடக்காது.

"Great things are done when men and mountains meet,
This is not done by jostling in the street."

* * *

11. மனித ஜாதி இழிவுற வேண்டுமாளுல், கலைகளை இழிவுறுத்துக. கலைவளர்ச்சியே, மனிதவர்க்கத்தின் உயர்விற்கு அடிப்படை.

"Degrade first the Arts
If you'd mankind degrade." —*Proverbs of Hell*

12. போ, துறவைக் கட்டி வை; அறிவை அணி. [அறிவற்ற துறவு, பயனில்லை.]

"Go, put off Holiness and put on Intellect."

13. நான், பொருளீகையால் நண்பரைச் சேகரிக்க முயன்றேன்; ஆளுல் அதற்கு மாருகப் பகைவரையே கொண்டேன்.

"I have tried to make friends, by corporeal
gifts, but have only made enemies."

14. சுவர்க்கானந்தம் என்பது, ஆன்மீக விஷயங்களின் அபிவிருத்தியைத் தவிர, வேறென்ன ?

"What is the joy of Heaven
but improvements in things of the spirit?"

15. போனகாலம் திரும்பாது. ("Every moment lost is a moment that cannot be redeemed.")

16. குற்றவாளியை மன்னிப்பதைவிடக் குற்றத்தைத் தடுப்பது நலம்.

"It is better to prevent error than forgive the criminal."

17. தொடர்ந்து பொய்யை அழித்தாலே, மெய் நிலைக்கும்.

"Establishment of Truth depends
on destruction of Falsehood continually."

18. அனைத்திலும் அனந்தத்தைக் காண்பவன் கடவுளைக் காண்கிறான். [புத்தியும் இந்திரியங்களும் வாக்கும் மனமும் எட்டாப் பொருளை, மனிதன் தியானத்திற் காண்கிறான்.]

"He who sees the Infinite in all things, sees God."

19. அனந்த பேதமிருந்தாலும், மனிதரெல்லாரும் (உள்ளே) ஒன்றே! அவ்வாறே எல்லா மதங்களும்.

"All men are alike though infinitely various; so all Religions."

*   *   *

20. ஐயுறு, ஐயுறு, சோதனையின்றி நம்பாதே!

"Doubt, doubt and don't believe
without experiment."

21. அளவுகடந்த துக்கம் சிரிக்கும்; அளவுகடந்த உற்சாகம் அழும். ("Excess of Sorrow laughs. Excess of Joy weeps.)

முற்றிற்று

# அன்பு நிலய நூல்கள்

## யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

### இயற்றியவை

ரூ. அ.

1. **சிலம்புச் செல்வம்** (2-ஆம் பதிப்பு) 3—0

இந்நூலில் இளங்கோவடிகள் வழங்கிய முத்தமிழ்ப் பெருங்காப்பியமாகிய சிலப்பதிகாரக் கதையை எல்லோருக்கும் விளங்கும்படி, தெளிவான இளந்தமிழில் எழுதப் பெற்றுள்ளது.

2. **மீரா விஜயம்** (அரிய இன்னிசை நாடகம்) 1—6

இந்நாடகத்தில் பக்த மீராவின் வரலாற்றைப் படிக்கவும், நடிக்கவும் ஏற்றவாறு சுவை ததும்ப எழுதப் பெற்றுள்ளது.

3. **திருக்குறளின்பம்** (4-ஆம் பதிப்பு) 3—0

"இனிய எளிய நடையும், பொருட் செறிவும், உபமானஉபமேயங்களும்கலந்துவிளங்கும் **திருக்குறள் இன்பத்தை** இந்த முறையில் ஸ்ரீ பாரதியார் அவர்களைப் போன்று எடுத்துக் காட்டியவர் இதற்குமுன் வேறு யாருமிலர்"—**டாக்டர் உ. வே. சாமிநாதையர்.**

4. **கலிமாவின் காதல் முதலிய கதைகள்** 1—0

இந்நூலில் மனிதசமுதாயத்திற்கு புதிய உணர்வளிக்கும் ஆறு அரிய இனிய கதைகள் அடங்கியுள்ளன.

5. **மீனாட்சிசுந்தரம் பிள்ளை** 0–10

புலவர் பெருமான் மீனாட்சிசுந்தரனாரின் வரலாறும், மணிவாசகங்களும் இந்நூலில் அடங்கியுள்ளன.

6. **இன்ப மாலை** (3-ஆம் பதிப்பு) 1—0

அன்பு, அமைதி, ஒற்றுமை, சமரசம், வாழ்வழகு, உள்ளறிவு, உலகறிவு, கடவுட்கலப்பு இவற்றிற்குத் தெளிவாக வழிகாட்டுகிறது இந்நூல்.

---

**ANBU NILAYAM**

PUBLISHERS & BOOK-SELLERS

RAMACHANDRAPURAM (P. O.)

Trichy Dist., S. India.

RAJAN ELECTRIC PRESS. G.T., MADRAS.